விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 30 வியாழக்கிழமை (12.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 176




# எருக்கலம்பிட்டி கடற்படைத் தளம் மீது விடுதலைப்புலிகள் நேற்றுத் தாக்குதல்

## முறியடித்ததாகக் கடற்படை அறிவிப்பு

(கிளிநொச்சி)

மன்னார்த் தீவில் எருக்கலம்பிட்டியில் அமைந்துள்ள கடற்படைத் தளம் மீது நேற்று அதிகாலை 2 மணியளவில் விடுதலைப்புலிகளின் கொமாண்டோ அணி தாக்குதல் நடத்தியுள்ளது. இத் தாக்குதலை முறியடித்து விடுதலைப்புலிகளைப் பின்வாங்கச் செய்ததாகக் கடற்படை தெரிவித்துள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வரும் இந்தியப் பிரதமரை சந்திப்பதற்குப் பிள்ளையான் விருப்பம்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வரவிருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட குழுவினர் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதற்கு மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லாவும் விருப்பம் தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமருடன் சந்திப்பொன்றை நடாத்தி கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகக் கலந்துரையாட எதிர்பார்த்திருக்கின்றோம்.

முதலமைச்சரும் ஏனைய தலைவர்களும் எமது பிரதேசத்தின் அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளோம் என ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.

தனக்கு வழங்கப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபை நேற்றுக் கூடியது

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை பேரவையின் சம்பிரதாயபூர்வ அமர்வு நேற்று இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் மொஹறான் விஜய விக்கிரம கலந்து கொண்டு சிறப்புரையாற்றியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தெரிவான மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ரவூவ் ஹக்கீம் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் நேற்றைய அமர்வில் கலந்து கொண்டிருந்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பெண்கள் இருவர் பதுளையில் வைத்துக் கொலை

(கொழும்பு)

பதுளை மடுல்சீமை ரோபரித் தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இரண்டு தமிழ்ப் பெண்கள் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் திருமணம் செய்து கொள்ள இருந்த யுவதியும் அவரின் தாயுமே சம்பவத்தின்போது கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தில் ஆண்கள் சிலரும் காயமடைந்துள்ளனர்.

தோட்டத்தின் அருகிலுள்ள சிங்களக் கிராமத்திலிருந்து வந்த சுமார் 18 பேர் வரை குறித்த வீட்டினுள் புகுந்து கொலை செய்துள்ளனர்.

இதைத் தடுக்க முற்பட்ட அவரின் தாயும் சம்பவத்தின்போது கொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் சம்பவத்தை நேரில் கண்ட வீட்டிலிருந்த ஆண்கள் வெளியாரும் சம்பவத்தின்போது தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர்.

ஆண் ஒருவரின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் நேற்றும் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

முகமாலையில் நேற்றுக் காலை இரண்டாவது நாளாகவும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 7.10 மணியளவில் விடுதலைப்புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீது விமானப்படையினரின் ஜெட் ரக விமானங்கள் இவ் விமானத் தாக்குதலை நடத்தியதாகவும் எனினும் சேதவிபரங்கள் குறித்து தெரியவரவில்லை எனவும் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார். (ச-5)

## விசேட அடையாள அட்டைகள் ஒக்டோபரில் வழங்கப்படும்

### யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்களுக்கான விசேட அடையாள அட்டை எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் வழங்கப்படும் என யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஜி.சந்திரசிறி தெரிவித்தார்.

நேற்றுத் தெல்லிப்பழையில் நடைபெற்ற பத்திரிகையாளருடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

விசேட அடையாள அட்டை அச்சிடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்து மதகுருமாருக்கான விசேட அடையாள அட்டைகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுக்கு அரசாங்கம் கண்டனம் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் இலங்கையில் தோல்வியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சென்னையில் தெரிவித்த கருத்தை அரசாங்கம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாகத் தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்காக மாத்திரம் இலங்கை அரசாங்கம் இன்று போராட்டம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் குழுவின் பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் சர்வகட்சிப் பேரவையில் இணைந்து கொள்ளும் வரை பேரவையின் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்க அதன் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தீர்மானித்துள்ளார்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டிருப்பதால் அவர்களைச் சர்வகட்சிப் பேரவையில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளையான் குழுவினரை இணைத்துக் கொள்வது (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டுத் தமிழர்கள் உடனான உறவை எவராலும் பிரிக்க முடியாது

### புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்நாட்டுத் தமிழர்களுடனான உறவை எவராலும் பிரிக்க முடியாது. விடுதலைப் புலிகள் மீது இந்தியா தடை விதிப்பதானது அரசின் தமிழின விரோதப் போக்கை உற்சாகப்படுத்துவதாகவே அமையும் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது; எமது இயக்கத்தின் மீது தடைவிதிப்பதனால் சிங்கள அரசின் தமிழின விரோதப் போக்கை இந்திய அரசு உற்சாகப்படுத்துவதாகவேயுள்ளது. இது தமிழ் மக்கள் மத்தியில் விடுதலை உணர்வை அதிகரிப்பதோடு இந்திய அரசின் மீது எமது மக்களுக்கு வெறுப்புணர்வை ஏற்படுத்துவதாக அமையும்.

வரலாற்று ரீதியாக இந்திய அரசு தனது உண்மையான நண்பன் யார் என்பதை உணரத் தவறி வருவதாகவே கருதுகின்றோம்.

போரா? சமாதானமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் புலிகள் அல்ல. சிங்கள ஆட்சியாளர்களின் கைகளில்தான் அது உள்ளது. தமிழர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டு ஐ.நா.படையை வரவழைக்க சதி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தமிழ், சிங்கள,முஸ்லிம் மக்கள் மத்தியில் இன வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டு ஐ.நா சமாதானப் படையை இலங்கைக்கு வரவழைப்பதற்கு தேசிய, சர்வதேச ரீதியில் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இன்னும் 6 மாதங்களுக்குள் எமது படையினர் முல்லைத்தீவை கைப்பற்றி விடுதலைப் புலிகளை தோல்வியடையச் செய்து விடுவார்கள்.

அதனைத்தடுத்து பிரபாகரனைப் பாதுகாப்பதற்கான முயற்சியே இதுவாகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அதன் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஏ-9 பாதைக்கு மாற்றீடான பாதையைத் தேர்ந்தெடுத்துள்ள எமது படையினர் இன்னும் 6 மாதங்களுக்குள் முல்லைத்தீவை கைப்பற்றி விடுவார்கள். இதன் மூலம் பிரபாகரனின் ஈழக்கனவு கலைந்துவிடும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான படையினரின் வெற்றியை திசைதிருப்பி பிரபாகரனைப் பாதுகாத்து ஈழத்தை பெற்றுக்கொடுப்பதற்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கறுப்பு யூலையை உருவாக்கி தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை நடாத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிங்கள மக்கள் மத்தியில் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டுமென்ற கருத்தொருமைப்பாட்டை சீர்குலைத்து வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, குண்டுவெடிப்புக்கள், மனித உரிமைகள் தொடர்பில் கவனத்தை திசைதிருப்பி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்ற அழுத்தத்தை அரசாங்கத்துக்கு ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே இனவன்முறைகளை ஏற்படுத்தி இரத்த ஆற்றை ஓடவிட்டு இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துச் செல்வதாக ஐ.நாவில் முறையீடு செய்து சமாதானப் படைகளை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கும் முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.


இந்த தேசத் துரோக திட்டத்தை முன்னெடுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதாகவும் பிரசாரத்தை சர்வதேச ரீதியில் முன்னெடுக்கின்றனர்.

இலங்கையில் சர்வாதிகார ஆட்சி நடத்தப்படுவதாகவும் இன வன்முறைகள் தலைதூக்கியுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் ஐ.நாவுக்கு முறையீடுகளை முன்வைத்து சமாதானப்படையை அனுப்பிவைக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளது.

இந்தியாவில் பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசாங்கத்துக்கு கட்சிபேதமின்றி ஆதரவு வழங்குகின்றன.

ஆனால் எமது நாட்டில் அந்த நிலைமை இல்லாது போயுள்ளது கவலைக்குரிய விடயமாகும்.

எனவே அரசாங்கத்தின் மெத்தனப்போக்கை பார்த்துக் கொண்டிருக்காது தேசத் துரோக சக்திகளை தோல்வியடையச் செய்ய தேசிய சக்திகள் ஒன்றிணையவேண்டும் என்றார். (ச-5)



வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி சமேத வீரபத்திரர் சுவாமி ஆலய சங்காபிஷேக உற்சவத்தின் மாலை நேர நிகழ்வாக இடம்பெற்ற இசைநிகழ்வில் மருதனார்மடம் வாழ்வக மாணவன் பாடல்கள் பாடுவதை படத்தில் காணலாம். (படம்:கோபி)

## மோசமான வாழ்க்கைத் தரம் வாய்ந்த நகரங்களில் ஒன்றாக கொழும்பு

### ஆய்வில் தெரிவிப்பு

2008ஆம் ஆண்டிற்கான வாழ்க்கைத் தரம் வாய்ந்த உலகளாவிய நகரங்களின் தரப்படுத்தல் வரிசையில் ஒக்லாந்து, ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சிறந்த வாழ்க்கைத் தரம் வாய்ந்த நகரமாகவும் பிராந்தியத்தின் மோசமான வாழ்க்கைத்தரம் வாய்ந்த நகரமாக டாக்காவும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நகரங்களே உலகளவில் கூடுதல் வாழ்க்கைத் தரம் வாய்ந்த நகரங்களாக தரப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தரப்படுத்தலில் சூரிச் முதலிடத்திலும் வியன்னா மற்றும் ஜெனீவா ஆகிய நகரங்கள் 2ஆம் இடத்திலும் உள்ளன.

வான்கூவர் மற்றும் ஒக்லாந்து ஆகிய நகரங்கள் முறையே நான்காம் ஐந்தாம் இடங்களைப் பிடித்துள்ளன.

அரசாங்கங்கள் மற்றும் தனியார் கம்பனிகளின் உதவியுடன் சர்வதேச ரீதியில் இத்தரக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கணிப்பீடு தனிப்பட்ட பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு உள்ளக ஸ்திரத்தன்மை, குற்றச் செயல்கள், சட்டத்தை நடைமுறைப்படுத்தல், ஏனைய நாடுகளுடனான உறவு ஆகியவை குறிப்பாக மதிப்பிடப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பான தரப்படுத்தலில் மிகக் குறைந்த புள்ளிகளை பாகிஸ்தான் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து கொழும்பு,டாக்கா,ஜகர்த்தா, மணிலா ஆகிய நகரங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆசியப் பிராந்தியத்தில் சிங்கப்பூர் 120.2 புள்ளிகளைப் பெற்று தனிப்பட்ட பாதுகாப்பில் முதலிடத்தில்உள்ளது. பாகிஸ்தான் 25.3 புள்ளிகளைப் பெற்று கடைசி ஸ்தானத்தில் உள்ளது.

எல்லைப் பிரச்சினைகள்,உள்ளகப் பிரச்சினைகள், மோசமான குற்றச்செயல்களால் பாகிஸ்தான், இலங்கை, இந்தோனேசியா ஆகிய நாடுகளைப் போல ஏனைய நாடுகளும் பின்தள்ளப்படும் வாய்ப்புகள் இருக்கின்றன என சிரேஷ்ட ஆய்வாளர் ஸ்லாகைன் பரகாதில் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட, குடும்ப பாதுகாப்பை கருத்தில் கொண்டு தொழிலாளர்கள் வெளிநாடுகளில் வாழ்வது பற்றி கவனம் செலுத்துகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2007 செப்ரெம்பர் முதல் நவம்பர் வரை தொடர்ச்சியாக சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டே இந்தத் தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக 350 நகரங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்ட பொழுதிலும் 215 நாடுகள் மாத்திரமே தரப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. (அ)

## யாழ்.குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகள் பிரதேச செயலர் பிரிவுகளூடாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் தீவகப் பகுதிகளிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி அப்பகுதிகளுக்கான உரிய அபிவிருத்தித் திட்டங்கள் வெகுவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதன் முதற்கட்டமாக நெடுந்தீவுப் பகுதியின் தற்கால மற்றும் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயும் முகமாக இன்று விசேட உயர் மட்ட மாநாடொன்று நடத்தப்படவுள்ளதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று மக்கள் சந்திப்பை அடுத்து வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்குள் வாழும் இனம் காணப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு மற்றும் சுய தொழில் முயற்சிகளுக்கான உதவித் தொகைகளை அம் மக்களிடம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் தற்கால மற்றும் எதிர்கால அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக பிரதேச செயலர் பிரிவுகள் வாயிலாக விரிவான ஆய்வுகளை அப்பகுதி மக்கள் அமைப்புக்கள் மற்றும் உரிய அதிகாரிகளைக் கொண்டு தான் மேற்கொண்டுவருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்புக்களுடன் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார் என சமூக சேவைகள் அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பாடசாலை பற்சிகிச்சையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சினால் பாடசாலை பற்சிகிச்சை பயிற்சி நெறிக்கு பெண் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக தகைமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவை பற்றிய விபரங்கள் 1551ஆம் இலக்க 23.05.2008ஆம் திகதிய வர்த்தமானியில் வெளிவந்துள்ளது.

மேலதிக விபரங்களை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிடலாமென பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## ஆமணக்கு விதையை உண்ட 26 சிறுவர்களுக்கு சுகவீனம்

(யாழ்ப்பாணம்)

ஆமணக்கு விதையை உண்ட 26 சிறுவர்கள் சுகவீனமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் உரும்பிராய் தெற்கு யோகபுரத்திலுள்ள நலன்புரி நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் குறிப்பிட்ட நலன்புரி நிலையத்தில் சிறுவர்களுக்கான ஒன்றுகூடல் இடம்பெற்றபோது, கச்சான் பருப்புப்போல் சுவையாக இருந்ததால் ஆமணக்கு விதையை சிறுவர்கள் உட்கொண்டுள்ளனர்.

சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் விபரம் வருமாறு,

ஏ.அருள்ராஜ்(வயது-6),ஏ.அருள்தாசன் (4), எஸ்.கனிஷ்டன் (9), சி.சுஜித் (9), சி.கோபிகா (13), எம்.ரஜீவன் (5), எம்.சுஜினி (15), எம்.சுஜிந்தன் (10), எம்.சுஜந்தன் (8), எம்.மதுஷா, எஸ்.கஜந்தினி (5),எஸ்.கஜானி (7), எஸ்.சதுஜன்(6), எஸ்.சாளினி (8), என்.கிரிஜா (15), எஸ்.சிந்துஜா (15), எஸ்.செந்தமிழ்ச்செல்வன் (11), எஸ்.விமல்ராஜ் (11),எம்.சுஜிதா (17), வி.பானுசன் (5), ஏ.அபிசன் (2),எ.அனிட்டன் (7),எம்.தர்சிகா (6), எம்.சுஜிபன் (13), எஸ்.நில்சன் (7), எஸ்.ஜமுனா (4). (ச-3,4)

## உடற்கல்வி ஆசிரியர்களுக்கு நாளை செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தரம் 11க்கு சுகாதாரம், உடற்கல்வி கற்பிக்கும் யாழ்.கல்வி வலய ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறும்.

இச்செயலமர்வில் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் அதனை கவர்ச்சிமிக்க பலன்கிட்டும் வாழ்க்கையாக கருதக்கூடாது.
–டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# பொதுமக்களின் தேவைகள் உடன் செய்யப்பட வேண்டும்

நவீன தகவல் தொழில் நுட்பத்தின் பயனாக இன்று உலகம் முழுவதிலும், கருமங்கள் விரைவாகவும் இலகுவாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் தங்கள் பணிகளை வீட்டில் இருந்தவாறே செய்து கொள்வதுடன், தமது வேலைகளையும் கவனிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை அரச அலுவலகங்களில் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதில் பொதுமக்கள் படும்பாடு போதுமென்றாகிவிட்டது.

அதிலும் யாழ்.குடாநாட்டு மக்களின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது.

வெளிமாவட்டங்களுக்கு பயணிப்பதற்கான பாதுகாப்பு தரப்பின் பயண அனுமதி முதல் கொண்டு குடும்பப் பதிவை மேற்கொள்வது ஈறாக, அனைத்துக்கும் வரிசையில் காத்திருக்கும் பரிதாபம் சொல்லுந்தரமன்று.

இதற்கு மேலாக வெளிநாடு செல்வதற்கான பொலிஸ் உத்தரவாதம் பெற்றுக் கொள்வது என்பது மக்களை அதிகமாக அலையவைக்கும் காரியமாகும்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் பொதுமக்கள் அலைவதே தொழிலாகிவிட்டது, எனவே இது விடயத்தில் அரச பணியாளர்களாவது பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

குறிப்பாக பிரதேச செயலகங்கள், கிராம சேவையாளர் அலுவலகங்கள், பதிவாளர் திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் போன்றவற்றில் கருமங்களை நிறைவேற்ற பொதுமக்கள் காத்திருப்பதை தவிர்ப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் தங்கள் அலுவலகத்தையும், பணியாளர்களையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

இது ஒவ்வொரு நிர்வாகிகளினதும் தார்மீக கடமையாகும்.

இன்றைய சூழ்நிலையில் பொதுமக்களை காத்திருக்க வைப்பது மிகப் பெரும் பாவச் செயல், நாளாந்த சீவியத்துக்கு ஆற்றலையும் மக்கள் தங்கள் உழைப்பின் நேரத்தை வீணடிப்பதை எவரும் அனுமதிக்கக் கூடாது.

அலுவலக நேரத்தில் பணியாற்றுவதற்காகவே ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது.

அப்படியானால், அவர்கள் அந்த நேரத்தை வீணடிப்பார்களாயின் அதற்கான சம்பளம் குறைக்கப்படவேண்டும். அதேநேரம் பொதுமக்களை எந்தவொரு பணியாளர் காத்திருக்க வைக்கிறாரோ அவர்களுக்கு நட்டஈடாக காத்திருக்கக் காரணமான பணியாளரும், அந்த நிறுவனத் தலைவரும் செலுத்தவேண்டும் எனச் சட்டம் கொண்டுவரப்படுமாயின் நிலைமை எப்படி இருக்குமென்பதை ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

எனவே எந்த ஒரு பணியாளரும் பொதுமக்களை காத்திருக்க வைக்காது அவர்களின் பணியை உடனுக்குடன் செய்தாகவேண்டும். அதுவே இறைவன் நமக்குத் தந்த உத்தியோகத்திற்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

# உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு கலாநிதி நேசையாவுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் உறுப்பினரான கலாநிதி தேவநேசன் நேசையாவை ஆணைக் குழுவில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளார்.



முக்கியமான 15 மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் 8 உறுப்பினர்களில் ஒருவராக கலாநிதி நேசையா நியமிக்கப்பட்டிருந்தார். இவரை ஆணைக் குழவில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியிருப்பதாக விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நிசாங்க உடலாகம தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் உறுப்பினரான கலாநிதி நேசையா மாற்றுக்கொள்கைகளைக்காண நிலையத்துடன் தொடர்புகளைக்கொண்டவர் எனவும் அந்த அமைப்பு பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுவதாகவும் சட்டத்தரணி கோமின் தயாசிறி ஜனாதிபதி செயலகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

முதூரில் பட்டினிக்கு எதிரான அமைப்பின் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் திருகோணமலையில் 5 இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணைகளிலிருந்து அவரை விலகுமாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது எனத்தெரிவித்திருக்கும் நீதிபதி உடலாகம கலாநிதி நேசையா ஆணைக்குழுவில் இருந்து விலகிக்கொள்வார் எனத் தெரிவித்துள்ளார்.

பட்டினிக்கு எதிரான அமைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அக்கறை காட்டி வருகிறது. இதனால் அந்த வழக்கு விசாரணைகளிலிருந்து நேசையா விலகிக்கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வேண்டுமாயின் ஏனைய வழக்கு விசாரணைகளில் அவர் இணைந்து கொள்ளமுடியும் என்றார். ஆணைக்குழுவின் தலைவர் இன்று நடைபெறவிருக்கும் விசாரணைகளில் ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி நேசையாவுக்கு பதிலாக வேறு ஒருவர் நியமிக்கப்பட மாட்டார் என அவர் கூறியிருந்தார். எனினும் இந்த விடயம் தொடர்பாக இது வரை எந்தவொரு தீர்மானத்திற்கும் தான் செல்லவில்லை என கலாநிதி நேசையா கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கும் கடிதத்திற்கான எனது பதிலை வழங்குவதற்கு வெள்ளிக்கிழமை வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் அதற்கான பதிலை நான் அனுப்பிவைப்பேன் என்றார் அவர். (அ)

# அரசு முஸ்லிம் மக்களைப் பாதுகாக்காவிடில் ஆயுதங்களை ஏந்தும் நிலை ஏற்படும்

## முஸ்லிம் விடுதலை முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளிடமிருந்து காணப்படும் அச்சுறுத்தலிலிருந்து கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களை பாதுகாக்க அரசாங்கம் தவறினால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தும் நிலைக்குத் தள்ளப் பட்டுவிடு வார்கள் என அரசியல் கட்சி யொன்று எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த முஸ்லிம் விடுதலை முண்ணனியின் பொதுச் செயலாளர் எம்.பி. காதர் இவ்வாறு கூறினார்.

தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் வன் முறை நிறைந்த சூழலுக்கு அரசாங்கமே காரணம் என அவர் குற்றம் சாட்டினார்.

அரசாங்கம் தனது நிலைப்புக்காக விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் ஆயுதக் குழுவின் உதவியுடன் கிழக்கு மாகாண சபை தேர்தலை நடத்தி முடித்துள்ளது. தேர்தல் ரீதியாகவோ நியாயமாகவோ நடத்தப்படவில்லை.

தேர்தல் காலப்பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்படவில்லை. கிழக்கு முஸ்லிம்களுக்கு சுதந்திரமோ விடுதலையோ இல்லை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலின் கீழ் இருக்கும் கிழக்கு முஸ்லிம்களின் நிலை என்ன? என்றுஅவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

முஸ்லிம் பிரதிநிதிகள் கூடுதல் ஆசனங்களைப் பெற்றால் கிழக்கு மாகாண சபையின் முதல மைச்சர் பதவி ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதி மொழி வழங்கிவிட்டு பின்னர் ஏமாற்றி விட்டதாக அவர் குற்றஞ் சாட்டினார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையாமல் கிழக்கிலுள்ள முஸ்லிம்களைக் பாதுகாக்க முடியாது என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டுமெனவும் அந்தக்கட்சியின் பொதுச்செயலாளர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணசபைக்கு தேர்தலை நடத்துவது என அரசாங்கம் எடுத்த தீர்மானமானது பொருத்தமானதல்ல. முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த அனைத்து முஸ்லிம் தலைவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென முஸ்லிம் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. (இ)

# ஆபத்பாந்தவன் பகவான் பாபா



பிறேமா என்ற சிறுமிக்கு ஆஸ்துமா நோய் தீவிரமாக பற்றிக்கொண்டது. குளிர் காலத்தில் இந்நோய் தாங்கமுடியாத வேதனையைக் கொடுத்தது. ஒரு நாள் இந்நோயினால் தாங்கமுடியாத நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாள். அன்றிரவு நோய் அதிகமாகி வைத்தியர்கள் அவளைப்பார்த்துவிட்டு பலனில்லை என்று சொல்லிவிட்டார்கள். சுவாசிக்கவே மிகவும் கஷ்டப்பட்டாள். அவளின் தாய் ,தகப்பன் பகவான் பாபாவை தியானித்தபடி 'சுவாமி! எல்லாம் நீயே , எங்களுக்கு உன்னைவிட வேறு கதியில்லை ' என்று மிகவும் ஆழமாக தியானம் செய்து கொண்டிருந்தனர். இரவு பூராகவும் சுவாமியின் சிந்தனையே.

விடிந்ததும் பிறேமாவின் முகத்தில் அமைதி காணப்பட்டது. சுவாசம் சாதாரணமாக காணப்பட்டது. எல்லாம் சுவாமியின் அனுக்கிரகமே என பெற்றோர்கள் நம்பினர். சில நிமிடங்கள் கழித்து பிறேமா பசியாக இருக்கின்றது என்று சொன்னதும் தாயார் உணவை ஊட்டிவிட்டாள். சாப்பிட்டதும் ஆர்வத்துடன் சொன்னாள் , இரவு மூச்சு விடுவது மிகவும் கஷ்டமாக இருந்த பொழுது , 'சுவாமி! என்னால் கஷ்டப்படமுடியவில்லை , என்னை உங்கள் பாதங்களில் சேர்த்து கொள்ளுங்கள் ' என்று ஓ என அழுதேன். அப்பொழுது என் மூச்சு மேலே போனால் அம் மூச்சுடன் சுவாமியும் மேலேபோகிறார். கீழே இறங்கினால் அவரும் கீழேயிறங்கிறார். நான் கைகளை குவித்து மனதார வேண்டினேன் 'சுவாமி , வேண்டாம் சுவாமி ' என்னுடைய கர்மபலனை நானே அனுபவிக்க விடுங்கள், என்னுடன் சேர்ந்து நீங்களும் அனுபவிக்க வேண்டாம். பார்க்கமுடியவில்லை. தயவுசெய்து சுவாமி விலகிக்கொள்ளுங்கள். ஆனால் சுவாமி விலகவில்லை.

ஆபாத்பாந்தவன் , அனாதரட்சகன் நிற்பாரா? அரை மணிநேரம் இப்படியே கழிந்ததும் தூங்கிவிட்டேன். விடிந்ததும் மூச்சுவிடுவது இலகுவாகவும் உடம்பில் களையே தெரியாத தன்மையும் காணப்பட்டது என்றாள். எல்லோரும் அழுதே விட்டனர். அன்றிலிருந்து தேறிவிட்டாள். காலையில் வைத்தியர் வந்து பார்த்ததும் அதிசயித்து விட்டார். நடந்ததை கேள்விப்பட்டதும் பரபரப்பும் ,ஆச்சரியமும் அவரை திக்குமுக்காடசெய்தது.

'என் வாழ்க்கையே என் உபதேசம் ' என்பதே சுவாமியின் அருள் வாக்கியமாகும். ஓரளவேனும் உலகியல் இன்பதுன் பங்களுக்கு அடிமையாகாது என்னையே தியானித்து என்னிடம் அசைக்கமுடியாத நம்பிக்கை வைப்பவர்களை காப்பதே என்கடமை. என்னுடைய வருகை பக்தர்களுக்காகவே என்பதை பகவான் தனது பதின்மூன்றாவது வயதில் அறிவித்தார். இதற்கு உவமையாக பகவான் நடத்திய , நடத்தும் ஆச்சரியமானதும், அற்புதமானதுமான லீலைகள் எந்த யுகத்திலும், அவதாரங்களிலும் காணமுடியாது.

ஜெய்சாயிராம் யாதவன்.

## வருடாந்த திருவிழா

(சித்தன்கேணி)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா இம் மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நற்கருணைத் திருவிழாவும், 15 ஆம் திகதி காலை 7.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் நடைபெறுமென பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (ஓ-17)

## அலங்கார உற்சவம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மாத்தாளோடை அருள்மிகு கருமாரி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் 11ஆம் நாளான 18 ஆம் திகதி புதன்கிழமை சங்காபிஷேகம் நடைபெற்று மாலை திருவூஞ்சலும் இடம்பெறும். (ஓ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ)

## மீளாய்வு செயலமர்வு

(அல்வாய்)

மாகாண வலய மட்ட (ESDSP) கல்வித்துறைசார் அபிவிருத்தித் சட்டக நிகழ்ச்சித் திட்ட அமுலாக்கல் தொடர்பான மீளாய்வு செயலமர்வு 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதி கல்விப் பணிப்பாளர்கள், முறைசாராப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் ஆகியோர் தவறாது பங்குபற்றுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (ஓ-19)

## சமூகம் தரக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச.(வட) இளைப்பாறிய ஊழியரின் பணிக்கொடை 2006 ஆம் ஆண்டின் பின் கொடுக்கப்படாது நிலுவையாகவுள்ளமை சம்பந்தமான வழக்கு விசாரணையின் 6ஆவது தவணை இன்று நடைபெறவுள்ளதாலும் 50 ஆவது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடு சம்பந்தமாகவும் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற இருப்பதால் ஓய்வுபெற்ற இ.போ.ச.(வட) ஊழியர்களை இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்துக்கு சமூகம் கொடுக்கும்படி ஓய்வுபெற்ற இ.போ.ச(வட) ஊழியர் நலன்புரிச் சங்க செயலாளர் க.கனகராசா கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# இறுதிப் போட்டிகளில் மோதவிருக்கும் கோவளம், ஒளிச்சுடர் விளை. கழகங்கள்

காரைநகர் குட்பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் -காரைநகரிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து ஒரு 20-20 மென் பந்தாட்ட நெடுந்தொடரை நடாத்தி வருகிறது.

இத் தொடரில் பங்குகொண்ட அனைத்து அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.

ஒவ்வொரு அணியும் தமது பிரிவிலுள்ள ஏனைய அணிகளுடன் இரு தடவைகள் மோதின. ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறும் அணிக்கு 5 புள்ளிகள் வழங்கப்பட்டன.

5 விக்கெட்டுக்களாலேயோ அல்லது 50 ஓட்டங்களாலேயோ வெல்லும் அணிக்கு 2 புள்ளிகள் போனஸ் புள்ளிகளாகக் கிடைத்தன.

வெற்றிபெறும் அணி போனஸ் புள்ளிகளைப் பெறத் தவறும் பட்சத்தில் தோற்கும் அணிக்கு 1 புள்ளி போனஸ் புள்ளியாக வழங்கப்பட்டது. மற்றும் தனிநபர் எடுக்கும் கட்சிக்-5 விக்கெட்டுக்கள் மற்றும் 50 ஓட்டங்களுக்கு தலா அரைப் புள்ளி போனஸாக வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் இரு பிரிவிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட தலா இரு அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. அரையிறுதி அணிகள் மீண்டும் தமக்குள் இரு தடவைகள் மோதின. புள்ளிகள் அடிப்படையில் 3ஆம், 4ஆம் இடத்தைப் பெற்ற அணிகள் தமக்குள் மோதின.

இதில் வென்ற இளஞ்சோலை விளையாட்டுக்கழகம் 3ஆம் இடத்துக்கான கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்ற கோவளம் விளையாட்டுக் கழகமும் ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகமும் மூன்று இறுதிப் போட்டிகளில் மோதக் காத்திருக்கின்றன.

இந்த மூன்று போட்டிகளில் குறைந்தது இரண்டு போட்டிகளில் வெற்றி பெறும் அணி 1ஆம் இடத்துக்கான கிண்ணத்தையும் - தவறும் அணி 2ஆம் இடத்துக்கான கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொள்ளும். ஆட்டத் தொடர் நாயகன் விருதுக்கும் பெரும் போட்டி நிலவுகிறது. (ஓ)

# சிங்கள மற்றும் ஆங்கிலமொழி சான்றிதழ்/டிப்ளோமா பயிற்சி

இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் இரத்மலானை மற்றும் யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி என்பன இணைந்து நடாத்தும் சிங்கள மொழி மற்றும் ஆங்கில மொழி சான்றிதழ் / டிப்ளோமா தர பயிற்சி நெறிகள் யாழ.தொழில்நுட்பக் கல்லூரியில் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகள் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் சமர்ப்பிக்கும்படி அதிபரும் மாகாணப் பணிப்பாளருமான ந.யோகராஜன் கேட்டுள்ளார்.

மேலதிக விபரங்களையும் மற்றும் விண்ணப்பப் படிவங்களையும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஓ)

## வீதி திறப்பு விழா

தோப்பு போதிப் பிள்ளையார் ஆலய வளர்ச்சிக்காக யாழ்ப்பாணம் அச்சுவேலி பிரதான வீதியில் இருந்து ஆலயம் வரை அமைக்கப்பட்ட புதிய வீதியை இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் கோப்பாய் பிரதேச செயலாளர் சீ.ஏ.மோகன்றாஸ் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். (ஓ)

## மீளாய்வு கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி அலுவலகத்தின் உயர்மட்ட செயற்பாடுகள் தொடர்பான மாதாந்த மீளாய்வுக் கூட்டம் இம்மாதம் 17, 19ஆம் திகதிகளில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை, மருதங்கேணி கல்விக் கோட்டங்களுக்கும், 19 ஆம் திகதி வியாழக்கிழமை கரவெட்டிக் கோட்டத்திற்கும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-19)

## தமிழ் திறன் போட்டி

பருத்தித்துறை கோட்ட மட்ட தமிழ் திறன் போட்டிகள் திட்டமிட்டபடி 13 ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் அறிவித்துள்ளார். (ஓ-19)

## எழுத்தாக்கப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி ஆகிய 3கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான எழுத்தாக்கப் போட்டிகள் யாவும் 14ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஓ-19)

## திருமஞ்சத் திருவிழா

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் உயர் திருவிழாவில் 10 ஆம் நாளான நாளை வெள்ளிக்கிழமை திருமஞ்சத் திருவிழாவில் 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று கைலாசவாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் அலங்காரக் காட்சி இடம்பெறும்.

நிகழ்வில் தேவஸ்தான வித்துவான் ஆர்.சுந்தராஜன் குழுவினர் மற்றும் நல்லூர் நாதஸ்வர கான வினோதன் எஸ்.பி.பாலமுருகன் குழுவினர் ஆகியோரின் மங்கல வாத்தியம் இடம்பெறும். (ஓ-6)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் புன்னாலைக்கட்டுவன் அருள்மிகு கருமாரி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவ காலங்களில் நடாத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவுகள் கடந்த 9 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும்18 ஆம் திகதி வரை மாலை 3 மணி தொடக்கம் 4 மணி வரை சிவலிங்க யோக கேந்திரா நிலையத் தலைவர் நா.நவராஜ் தலைமையில் இடம் பெற்று வருகின்றது.

இச் சொற்பொழிவுத் தொடரில் இன்று வியாழக்கிழமை ''உனக்கு நீயே விளக்கு'' எனும் விடயத்தில் சைவப்புலவர் நா.நவராஜும் நாளை வெள்ளிக்கிழமை ''அம்பிகையை சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்'' எனும் விடயத்தில் சி.சசீவனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ஓ-6)

## இதழியல் டிப்ளோமா சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் பகுதி நேர இதழியல் டிப்ளோமா கற்கைநெறியை நிறைவுசெய்த மாணவர்களிற்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலைய மண்டபத்தில் இடம் பெறுமென நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படி கற்கைநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெறத் தகுதி பெற்ற மாணவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக பட்டச் சான்றிதழுக்குரிய கட்டணமாக ரூபா 350 இனை யாழ்.பல்கலைக்கழகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலைய அலுவலகத்தில் காண்பித்து சான்றிதழ் பெறுவதை உறுதிப்படுத்தும்படி பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)




## வலுவூட்டல் செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பிரதேச முன்பள்ளி முதன்மை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளையும், முன்பள்ளி ஆசிரியைகளுக்கான வலுவூட்டல் செயலமர்வுகளையும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடாத்தவுள்ளது.

12ஆம் திகதியும் 13 ஆம் திகதியும் முன்பள்ளி முதன்மை ஆசிரியர்களுக்கான செயலமர்வு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலை மண்டபத்திலும்,

முன்பள்ளி ஆசிரியைகளுக்கான வலுவூட்டல் செயலமர்வு 14, 15ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்திலும் 16 ஆம் திகதி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டபத்திலும் நடைபெறுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-52)



பருத்தித்துறை இலங்கை வங்கியின் பொன் விழாவையொட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அனுசரணையுடன் நடாத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி பரிசளிப்பு விழாவில் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் பி.ஆனந்தநடேசன் தலைமை தாங்கி உரையாற்றுவதையும், இலங்கை வங்கி இளைப்பாறிய வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், பிரதம விருந்தினரான செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.சிவரத்தினம், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவர் எஸ். கதிர்காமராஜ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பருத்தித்துறை இலங்கை வங்கி விளையாட்டுக் குழுச் செயலாளர் எஸ். அரவிந்தன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் சம்பியனான கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கான பரிசிலை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படம்:பருத்தித்துறை நிருபர்)

# தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு மானியம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபையினதும் தனியார் பேருந்துகளினதும் கட்டணங்களுக் கிடையிலான வித்தியாசத் தைக்குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் ஏற்பட்ட எண்ணெய் விலைகளின் பாரிய அதிகரிப் புக் காரணமாக தனியார் பேருந்துக் கட்டணங்களை 27.2 வீதத்தினாலும் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமா ன பேருந்துகளின் கட்டணங்களை 17 வீதத்தினாலும் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட அவர் பேருந்துக்கட்டணங்க ளுக்கிடையிலான வித்தியாசத்தைக் குறைக்கும் பொருட்டு ஒரு லீற்றர் டீசலுக்கு 20 ரூபா மானியம் வழங்குவது குறித்து ஆலோசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் தனியார்பேருந்து உரிமையாளர்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகளைக்குறைக்கும் பொருட்டு விசேட மானியத் திட்டம் ஒன்றினை நடைமுறைப் படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தின் மூலம் தனியார் பேருந்துகளின் சேவையினை வினைத்திறனுள்ளதாகவும் மக்கள் நலன் கொண்டதாகவும் மாற்ற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதன் மூலம் எரிபொருள் வீண்விரயத்திற்கான செலவினத்தை 30 பில்லியன் ரூபாவிலிருந்து 5 பில்லியன் ரூபாவாக குறைக்க முடியும் எனக் குறிப்பிட்ட அமைச்சர் இதன் பொருட்டு தேவையற்ற பேருந்து தரிப்பிடங்களை அகற்றவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கிடையில் 3 பேருந்துத் தரிப்பிடங்களை மாத்திரமே அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அப்பாவி பொதுமக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கத்தோலிக்க மதகுருமார் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த சில மாதங்களாக இடம் பெற்று வரும் குண்டுத்தாக்குதல்களில் அப்பாவிபொதுமக்கள் கொல்லப்படுகின்றமை தொடர்பாக இலங்கை கத்தோலிக்க மதகுரு மார் கவலை வெளியிட்டுள்ளனர். எந்தவொருமனித உயிரையும் கொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுகின்றமை பயங்கரமானது. இவ்வா றான நிலையில் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் பயங்கரவாதம் மற்றும் வன் முறை களை நாங்கள் கண்டிக்கின்றோம். வன்முறைகள் மூலம் எதனையும் சாதிக்க முடியாது. வன்முறைகளை கைவிட்டு விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் சமாதான வழியில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என இலங்கை கத்தோலிக்க மத குரு மார் மாநாடு எனும் அமைப்பு விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கும்நிலையைகருத்தில்கொண்டு அரசாங்கம் மற்றும் அனைத்து கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து வன்முறைகள் மற்றும் பயங்கர வாத நடவடிக்கைகளிலிருந்து அப்பாவி பொதுமக்களையும் சிறுவர்களையும்பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகள் உட்பட நாட்டில் அனைத்து பாகங்களிலுமிருக்கும் அப்பாவி பொது மக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சமாதான வழி மூலமே இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாண முடியும் என்பதால் ஜனாதிபதியும் அரசாங்கமும் அனைத்து அரசியல் வாதிகளையும் கூட்டிணைத்து பிரச்சினைகளுக்கு அமைதி வழியில் தீர்வு காண வேண்டும். சமாதானத் தின் மூலம் பாரிய அனர்த்தம் ஒன்றை தவிர்கக முடியும் என இலங்கை கத் தோலிக்க மதகுரு மார் மாநாடு எனும் அமைப்பு விடுத் துள்ள அறிக்கையில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது. (அ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெள்ளைக் கரிசலாங்கண்ணி

**(கையாந்தகரை / கரிசாலை)**

Botanical Name - wedelia chinensis

Family - Compositae

sinh - wan - Kikirindiya

இது சுமார் ஒரு அடி உயரம் வரைக்கும் வளரும். அடி வேரி



லிருந்து சில தண்டுகள் செங்குத்தாகவும், வேறு சில பக்கம் நோக்கி படர்ந்தால்போலும் வளரும் ஒரு வகைச் செடியாகும். இதில் சில தரையோடு ஒட்டிப் படர்ந்தும் வளரும். நல்ல பசுமை நிறக் கொடியைகையால் அழுத்தினால் நசுங்கும். சுமார் 3முதல் 7செ.மீ. நீளமும் 1முதல் 2செ.மீ. அகலமும் உள்ள நீண்ட கத்திபோன்ற உருவமும், நல்ல பசுமையுமுடைய தடிப்பற்ற இலை கள் மெல்லிய காம்புகளில் அமைந்திருக்கின்றன. செடி பூராவும் ஒரு வித சுணைகளிருப்பதால் இது அதிகம் சொரசொரப்பாக இருக்கும். காம்பொன்றிற்கு ஒன்றாகவுள்ள அண்ட கோசத்தில் பல பூ மொட்டுக்கள் உள்ளன. மிகச் சிறிய பூவின் இதழ்கள் வெண்மையானவை. பூநெத்தில் நீண்ட சிறிய மண்ணிறவிதைகள் செறிந்திருக்கும். ஒரு வருடம் வரை வாழக்கூடிய செடியாகும்.

**கிடைக்குமிடமும், பயிரிடுதலும்.**

எல்லா மணல்களிலும் வளரக் கூடியது. நீர் பற்றுள்ள இடங்களில் அதிகமாகக் காணப்படும். யாழ் மாவட்டத்தில் சங்கானை, டச்சு வீதி, (உடு வில்). அச்சுவேலி, கைதடி போன்றபிரதேசங்களில் மழைநீர் ஓடும் வெள்ள வாய்க் கால்களில் நீர்வற்றிய பின்பு கரிசாலை செழிப்புற்று வளருவதை நன்கு அவதானிக் கலாம். சிறு கன்றுகளை பிடுங்கி, 30செ.மீ. தூரத்திற்கு ஒன்றாக நட்டு வளர்க் கலாம். அல்லது விதைகளை போட்டும் வளர்க்கலாம்.

**மருந்துச்சத்துக்கள் :**

**100 கிராம் இலையி லுள்ள சத்துக்கள் பின்வரு மாறு.**

புரதம் (கி) 4.4
கொழுப்பு(கி) 0.8
மாப்பொருள் (கி) 9.2
கல்சியம் (மி.கி) 306
பொஸ்பரஸ் (மி.கி) 462
இரும்பு (மி.கி) 8.9

மருத்துவப் பயன்கள் :

❖ 5கிராம் இலையை வல்லாரை, கொத்தமல்லி, சிறிது தேங்காய்ப்பூ சேர்த்து சட்னி செய்து அல்லது பல கீரைக் கூட்டோடு சேர்த்து சமைத்து உண்ண உடல் வலிமை பெறும்.

❖ . யானைக்கால் நோய்க்கு இலையின் விழுதை பூசிக்கட்ட லாம்.

❖ கரிசாலை இலைகளை சுத்தம் செய்து சாறுபிழிந்து சமஅளவு நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி தைலமாக்கி வடிகட்டி சேகரித்து வைத்துக் தலையில் தேய்த்துவர மயிர் கருமையாகும். மயிர் நன்கு வளரும், தலைவலி, கண்ணெரிச்சல் தீரும்.

❖ இலைகள் சுத்தப்படுத்தி வாயிலிட்டு மென்று பற்களைத் தேய்க்க பல்நோய்கள் நீங்கி, பற்கள் சுத்தமாகி வெள்ளை நிறம் பெறும்.

❖ இதன் இலைச்சாற்றை படர் தாமரை, சொறி, சிரங்கு போன்ற வற்றிற்கு பூச நோய் தணியும்.

❖ தீமைதரும் கண்மைக ளுக்கு பதிலாக கரிசலாங்கண்ணி கண்மையை பயன்படுத்துதல் சாலச் சிறந்தது. இம்முறை தீங்கற்றதும், கண்களுக்கு குளிர்ச்சியைத்தரக் கூடியதும், கண்மயிர் மிகு கருமை பெறும்.

**கரிசலாங்கண்ணி கண்மை :**

கரிசலாங்கண்ணி இலைகளை சேகரித்து தண்ணீரில் சுத்தமாகக் கழுவி சாறுபிழிந்து ஒரு கிண்ணத்தில் வைத்துக் கொள்ளவும். இவ்விலைச்சாற்றில் மெல்லிய தூய்மையான வெள்ளைத் துணியை தோய்த்து காற்றில் உலர்த்தவும். உலர்ந்தபின் இதே துணியை மறுபடியும் கிண்ணத்திலுள்ள காற்றில் தோய்த்து எடுத்து உலர்த்தவும். இவ்வாறு ஐந்துமுறை தோய்த் துலர்த்திய துணியை நல்லெண்ணை விளக்கில் கரியாக்கி ஆமணக் கெண்ணை யில் குழைத்து, வழித்து பத்திரப்படுத்தி வைத்து கண்மையாக பூசிவ ரலாம்.

❖ கரிசலாங்கண்ணி இலைச் சாற்றை மோரில் சமபங்கு கலந்து அருந்த பாண்டு (இரத்தச் சோகை/ இரத்தக் குறைபாடு தீரும்.


❖ இலைச்சாற்றுடன் தேனைக் கலந்து கொடுக்க குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல் தீரும்.

❖ இலைச்சாறு 1தேக்கரண்டி எடுத்து வெள்ளாட்டுப்பாலில் கலந்து காலையில் குடிக்க வெப்ப இருமல் தணியும்.

❖ 4பங்கு கரிசலாங்கண்ணிச் சாறிற்கு 2பங்கு பசுநெய் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி கற்கண்டு சேர்த்து காலை,மாலை 1 தேக்க ரண்டி உண்ண மலச்சிக்கல், மூலநோய் தீரும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் M.D.C.S
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

**ஒன்பதாம் திருவிழா**

### எங்கள் நாகபூஷணி தாயே

அருள் பொழியும் முகம் ஒன்று
தேவி பெருமை கூறும் நின்று
கலி தீர்க்க அம்மா என கூறு
வினை ஓடுதா இல்லையா பாரு

அலை ஒலிக்கும் தேவியின்
சந்நிதானத்தில் உருகி நின்றால்
அனைத்தையும் அள்ளி கொடுப்பாள்
எங்கள் நாகபூஷணி தாயே!

*எஸ்.தர்ஷன் கதிரிப்பாய் , அச்சுவேலி*

### விழிகொள் அம்மா

நதி பல சேர் திரை கடல் சூழ் நயினை அம்மையே
என் நாவாடி உன் நயம் பாட வேண்டும் அம்மா
சுதி பல சேர் சுவைமிகு கவிகொள் சுந்தரி அம்மையே
கதி ஏதும் இல்லா கலையும் தமிழினம் காத்திட–விழிகொள் அம்மா

ஆழ் கடல் மீனினம் உன் உருக்காணத் –துள்ளும்
புற்றுறை நாகமும் உன் புகழ் பாட –ஆடும்
நயினையின் ஆவினம் உன் அருள் காண –உருகும்
யாழ். இன மக்கள் உன் அடி காண –விழிகொள் அம்மா

*குரும்பைநகர் குயில்.*

### நல்லருள் தரும் தாயே !

நாகபூஷணியே நல்லருள் தருபவளே –எம்
பாவங்களைப் போக்க பாரினில் உதித்தவளே
சம்மந்தர் இடர்தீர்க்க இடபத்தில் தோன்றினாய் நீ
இப் பாரினில் நாம் பாடும் இடர்தனை அறியாயோ
எல்லையில்லா துன்பம் எமை வந்து சேர்ந்த போதும்
கள்ளமில்லா உன்னடியை கணப் பொழுதில் நினைத்திடவே
கொல்ல வந்த கொடிய வினையெல்லாம்
மின்னல் போல் மறைந்திடுமே தாயே!

*சு.பிரதீஸ்– உரும்பிராய்.*

### நலமுடனே வாழ வைப்பாள் நாகபூஷணி

நயினையிலே கோயில் கொண்டாள் நாகபூஷணி
நலமுடனே வாழ வைப்பாள் நாகபூஷணி
அயன் எழுத்தை மாற்றிடுவாள் நாகபூஷணி
பயம் எனக்கு ஏன் அவளின் பாதமே கதி.
ஆரணியே பூரணியே அம்மா நாகபூஷணி
அன்புடன் எம்மை அணைத்திடுவாள் நாகபூஷணி
கலியுகத்தில் கவலையின்றி காத்திடுவாள் நாகபூஷணி
கற்பூர ஒளியினிலே காட்சிதரும் நாகபூஷணி

*க.லோகேஸ்வரன்*
*தொல்புரத்தூர் ஆர்மோனிய இசையரசு*

### நாக பூஷணியைப் போற்றிட வாரீர்!

ஓமெனும் பிரவண ஒலிதான் –அண்டம்
ஓயாதே ஒலிப்பது அதுதான்
ஆமதே ஒளியாய் வருமாம் –அதுவே
அகிலமாய் உருண்டு தருமாம்
அண்டத்தில் அருட்பெருஞ் சோதி– ஞால
அத்தனை உயிரிலும் சோதி
பிண்டத்தில் அதன் திறன் பாரீர்–ஞானம்
பேணியே நாகபூஷணியைப் போற்றிடவாரீர்

*கவிஞர் செ.பரமநாதன் –தாவடி*



நயினையில் வீற்றிருக்கும்
நாகபூசணி தாயின்
அருளாசிகள்
அனைவருக்கும்
கிடைக்கட்டும்.

PC PARK (PVT) LTD.

633, K.K.S Road, Jaffna
T.P:- 0212229581
Fax:- 0212229581

Pointpedro Road,
Nelliyadi.
T.P:-0212264828
Fax:-0212229581

# குண்டுவெடிப்பில் சதாம் உசேனின் பழங்குடி இனத் தலைவர் பலி

(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேனின் பழங்குடி இனமான அல்பு நாசாரின் தலைவராக இருப்பவர் ஷேக் அல் நெடா . இவர் சன்னி முஸ்லிம் ஆவார்.

சதாம் உசேன் தூக்கிலிடப்பட்ட பிறகு அவர் உடலை பெற்றுக்கொண்டவர் நெடா தான்.

இவர் ஆவ்ஜா நகரில் உள்ள தன் வீட்டில் இருந்து காரில் புறப்பட்டார். காரின் அடியில் ஒரு வெடிகுண்டு இணைக்கப்பட்டு இருந்தது. இது வெடித்ததில் இவர் பலியானார் .இவருடன் கார் டிரைவரும் பலியானார். மற்றும் 2 பாதுகாவலர்கள் காயம் அடைந்தனர்.

நெடாவின் சகோதரர் கடந்த 2006ஆம் ஆண்டு மர்ம மனிதர்களால் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்ரேலியப் பிரதமருடன் அமெரிக்க ஜனாதிபதி சந்திப்பு

(இஸ்ரேல்)

இஸ்ரேயப் பிரதமர் எகுட் ஓல்மார்ட் அமெரிக்க ஜனாபதி ஜோர்ஜ் புஷ்சுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். வோஷிங்டனுக்கு விஜயத்தை மேற் கொண்டுள்ள இஸ்ரேலியப் பிரதமர், ஓவல் அலுவலகத்தில் புஷ் உடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

## உலக தரிசனம்



இதன்போது இரு நாடுகளுக் குமிடையிலான உறவுகள் திருப்திகர மான நிலையில் உள்ளதாகவும், ஈரானிய அணு சக்தி விவகாரம் மற்றும் மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகள் என்பன தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியப் பிரதம மந்திரி எகுட் ஓல்மார்ட் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஆகியோர் தொடர்ந்தும் தாம் இணைந்து பணியாற்றவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (அ)

# ஒரேநாளில் 46 வருடகாலக் கணிப்பீடு; அதிவேக கணனி ஒன்று வடிவமைப்பு

## அமெ.சக்தி வள திணைக்களம் அறிவிப்பு

அமெரிக்கா அணு ஆயுத பரிசோதனைகளை மேற்கொள்ளும் முகமாக உலகிலேயே அதிவேகமாக இயங்கும் கணனியொன்றை வடிவமைத்துள்ளதாக அமெரிக்க சக்திவள திணைக்களம் அறிவித்துள்ளது.

இக் கணனியானது ஒரு செக்கனுக்கு ஆயிரம் திரில்லியன் கணிப்பீடுகளை மேற்கொள்ளும் திறன்கொண்டது. நியூமெக்ஸிக்கோவிலுள்ள லொஸ் அலமொஸ் தேசிய ஆய்வு கூடத்திலுள்ள இக்கணனியானது அமெரிக்க அணு ஆயுத பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு மட்டும் அல்லாது உலகளாவிய சக்தி சவால்களுக்கு தீர்வாகவும் அமைவதாகக்கூறப்படுகிறது.

உலகில் உள்ள 6பில்லியன் மக்கள் சாதாரண கணிப்பானைப் பயன்படுத்தி வருடத்தில் உள்ள அனைத்து நாட்களிலும் 24 மணிநேரம் உழைத்து 46 வருடங்களில் மேற்கொள்ளும் கணிப்பீட்டை இந்த ரோட் ரன்னர் கணனி ஒரு நாளில் நிறைவேற்றும் வல்லமையைக்கொண்டு விளங்குகிறது. (அ)

# மனித வெடிகுண்டாக அனுப்பப்பட்ட சிறுவன் இராணுவத்திடம் சிக்கினான்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஒன்றும் அறியாத சிறுவர்களை கூட மூளை சலைவை செய்து மனித வெடி குண்டாக பயன்படுத்தி வந்தார்கள்.

அப்படி அனுப்பப்பட்ட 14 வயது சிறுவன் ஒரு வன் இராணுவத்திடம் சிக்கி இருக்கிறான் அவனது பெயர் சாகிருல்லா யாசின் அலி.

பாகிஸ்தான் வர்சிஸ்தான் பகுதியில் உள்ள தொண்டாலா கிராமத்தை சேர்ந்தவன் அவனை 2 தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானுக்கு அழைத்து சென்று மனித குண்டாக பயன் படுத்த முயற்சித்துள்ளனர்.

இவன் மூலம் கார் வெடி குண்டை வெடிக்க செய்ய திட்டமிட்டுள்ளனர். இதற்காக அவனுக்கு கார் ஓட்ட பயிற்சியும் அளித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள கோஸ்ட் நகரில் வீட்டில் அவனை அடைத்து வைத்து இருந்தனர். அப்போது அங்கு வந்த அமெரிக்க கூட்டு படையினர் அவனை கண்டு பிடித்து மீட்டனர்.

தற்போது அவனை ஆப்கானிஸ்தான் ஜெயிலில் அடைத்துள்ளனர். மனிதவெடி குண்டாக மாறியது குறித்து சாகிருல்லா யாசின் அலி நிருபர்களிடம் கூறியதாவது,

நான் ஊரில் இருந்த போது முல்லா சலேப் என்ற தீவிரவாதியும் மற்றும் ஒரு வரும் என்னை சந்தித்தனர்.

அவர்கள் என்னிடம் நீ கடவுளுக்கு சேவை செய்யும் நேரம் வந்துவிட்டது. வெளி நாட்டுக் காரர்கள் கடவுளுக்கு எதிரிகள். அமெரிக்கர் மற்றும் இங்கிலாந்து காரர்களை கொன்று மக்களுக்கு நீதி வழங்க வேண்டும். அவர்களை குண்டு வைத்து கொல்வதன் மூலம் நீதியை வழங்கலாம் . நீ அதற்கு தயாராக வேண்டும் நீ செய்யும் செயலுக்காக உன் குடும்பத்துக்கு நாங்கள் உதவி செய்வோம்.

கடவுளுக்கு சேவை செய்வது உன் கடமை அதில் இருந்து தவறக் கூடாது உன்னை கடவுள் காப்பாற்றுவார் என்று கூறினார்கள்.

அதை நம்பி அவர்களுடன் சென்றேன் எனக்கு கார் ஓட்ட கற்றுக்கொடுத்து மனித குண்டாக பயன்படுத்த முயற்சித்தார்கள்.

குண்டு வெடித்தால் நான் செத்து போவேன் என்பதை இப்போதுதான் உணர்கி றேன் இவ்வாறு அவன் கூறினான். (அ)

# சூடானில் விமானம் தீப்பிடித்து 120பயணிகள் பலி பலர் படுகாயம்

(கார்டூம்)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானுக்கு சொந்தமான விமானம் ஒன்று ஜோர்டான் தலை நகர் அம்மானுக்கு சென்று விட்டு மீண்டும் சூடானுக்கு திரும்பி கொண்டிருந்தது. ஏர் பஸ் ரக 310 வகையை சேர்ந்த இந்த விமானத்தில் 14 விமான ஊழியர்கள் உட்பட 217 பேர் பயணம் செய்தனர்.

வழியில் விமானம் சிரியா நாட்டில் உள்ள டமாஸ்கன் நகரில் இறங்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. சூடானில் உள்ள கார்டூம் நகர் சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கியது. அப்போது வானிலை மோசமாக இருந்தது. ஆனாலும் விமானத்தை விமானி தரை இறங்கினார்.

விமானம் ஓடு தளத்தில் இறங்கி சிறிது தூரம் ஓடியது. அப்போது திடீரென விமானத்தில் ஒரு என்ஜின் வெடித்தது. இதனால் விமானத்தில் தீப் பிடித்தது. தீ மள மளவென விமானம் முழுவதும் பரவியது பயணிகள் அலறினார்கள் உடனே விமான ஊழியர்கள் அவசர கதவைத் திறந்து விட்டனர்.

விமான நிலையத்தில் இருந்த மீட்பு படையினரும் விரைந்து வந்து விமானம் மத்தியில் உள்ள வாசலில் ஏணிப்படியை பொருத்தினார்கள். அதன் வழியாக பயணிகள் வெளியே இறங்கி ஓடி வந்தனர். பலர் விமானத்தில் இருந்து கீழே குதித்தனர்.

ஆனால் பல பயணிகள் விமானத்துக்குள் சிக்கி கொண்டனர். அவர்கள் கருகி பலியானார்கள். மொத்தம் 120 பயணிகள் பலியாகி விட்டதாகவும் 97 பேர் காப்பாற்றப்பட்டதாகவும் விமான நிலைய மருத்துவ அதிகாரி முகமது உஸ்மான் தெரிவித்தார்.

உயிர் தப்பியவர்கள் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சூடானில் 2003ஆம் ஆண்டு இதே போல ஒரு விமானம் விழுந்து நொறுங்கி 115 பயணிகள் பலியானார்கள். கடந்த மாதம் குட்டி விமானம் ஒன்று விழுந்து நொருங் கியதில் சூடான் இராணுவ மந்திரி உட்பட 22 இராணுவ அதிகாரிகள் பலியானார்கள். (ஓ-5)

# செல்போன் பயன்படுத்துவதால் மன அழுத்தம் அதிகரிக்கிறது

(லண்டன்)

செல்போனை பயன்படுத்துவதால் இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் மன அழத்தம் அதிகரிப்பதாக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதனால் அவர்களின் படிப்பு பாதிக்கப்படுவதுடன் தூக்கமின்மை பொறுப்பற்ற மனப்போக்கு போன்ற பிரச்சினைகளும் ஏற்படுகிறது.

சுவீடன் நாட்டில் 14 முதல் 20 வயதுக்குட்பட்ட 21 மாணவர்களிடம் செல்போன்களை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.


இதில் அதிக நேரம் செல்போனை பயன்படுத்தும் 20 மாணவர்கள் மன அழுத்தம், ஆழ்ந்த தூக்கம் இன்மை போன்ற பிரச் சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளது தெரிய வந்தது.

இவர்களால் படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்த முடியாததுடன் முக்கிய விஷயங்களில் கூட பொறுப்பில்லாமல் செயல்படும் மனப் போக்கும் இவர்களிடம் காணப்படுகிறது.

புகை பிடித்தல், மது போன்றவைக்கு அடிமையாவது போல சில இளைஞர்கள் செல் போன்களை பயன்படுத்துவதற்கும் அடிமையாகியுள்ளனர்.

இதே நிலை தொடர்ந்தால் அவர்களது உடல்நிலையையும் இது பாதிக்கும் என்பதும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனவே செல்போனை அதிகம் பயன் படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து இளை



ஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கர்ப்பிணிகளுக்கும் பாதிப்பு , கர்ப்பமாக இருக்கும் பெண்கள் அதிக அளவில் செல் போனை பயன்படுத்தினால் கருவில் இருக்கும் குழந்தைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் 7 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் செல்போன்களை அடிக்கடி பயன்படுத்துவதால் அவர்களது உடல்நிலை பாதிக்கப்படும் என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (அ)

# புகைப் பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையான 4வயதுச் சிறுவன்

தாய்வான் நாட்டில் உள்ள காவோஷியாங் நகரைச் சேர்ந்த 4வயதுச் சிறுவன் ஒருவன் புகைப் பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமை



யாகியுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த சிறுவன் தன் தந்தை வைத்திருக்கும் சிகரெட்டுகளை திருடி புகைப்பதை வழக்கமாக கொண்டுள்ளதாகவும் புகைப் பிடிக்கும் போது என் தந்தை நல்ல குஷியாக இருப்பார் . இதை பார்த்து தான் நானும் புகை பிடிக்க தொடங்கினேன் என குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் தந்தையிடம் இருந்து திருடியவன் பின்பு அண்ணனிடம் சிகரெட்டுகளை கடன் வாங்கத் தொடங்கியதாகவும் அண்ணனுக்கு வயது 9 அவனும் தந்தையிடம் திருடுவதை வாடிக்கையாக கொண்டிருந்ததாகவும் அண்ணனும் தம்பியும் புகைப்பிடிப்பதை ஒருநாள் பார்த்த தந்தை உடனே அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்துள் ளதாகவும் மேலும் தெரியவரும்.

அதேவேளை, அங்கு அவர்களுக்கு புகைப்பிடிப்பதை கைவிடுவதற்கான சிகிச்சை அளிக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

# மீள் பார்வை

# நோத் முதல் கோப்பல்லவா வரை 5



**க.சி.குலரத்தினம்**

## எங்கள் இலங்கை

பிரித்தானியர் தென்கிழக்காசிய நாடுகளில் தங்கள் பேரரசு நலனுக்காக இலங்கையில் அதிக பற்று வைத்திருந்தார்கள். அதன் கேந்திரத்தானம் அவர்களுக்கு வாய்ப்பாக இருந்தமை போலவே இலங்கை வாழ் மக்களின் இனவாதமும் அவர்களுக்குச் சாதகமாய் இருந்தது. இனவாதமும் அவர்கள் எமக்கு விட்டுச் சென்ற வரப்பிரசாதமே.

இரண்டாவது மகா யுத்தத்தின் போதும் பிரித்தானிய அமெரிக்க படைகளுக்கு இலங்கை அரிய தளமாய் இருந்தது. அதற்கு முன்னாகவே இலங்கையின் பொருளாதாரப் பிடியும் பிரித்தானியர் கையிலேயே இருந்தது. இலங்கையில் 1933 ஆம் ஆண்டளவில் 193 ஐரோப்பிய கம்பெனிகள் இருந்தன. இவற்றுள் பெரும்பாலானவை.வெள்ளைக்காரருடையதாகும்.

இவை 70 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட மூலதனத்தைக் கொண்டு நடத்தப்பட்டவை. இத்தொகையில் 50கோடி ரூபா வரையில் தோட்டப் பகுதிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இவற்றை விட அமெரிக்க மூலதனமும் இலங்கைப் பொருளாதாரத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

பிரித்தானிய பேரரசு வாதம் இலங்கையைப் பெரும்பாலும் மூலப்பொருள் உபகரிக்கும் களஞ்சியமாகவும் ஓரளவுக்கு விவசாய நாடாகவும் மட்டந்தட்டி வைத்திருந்தது என்றே கூறவேண்டும். அன்றி இலங்கை வாசிகளின் அபிலாஷைகள் முற்றாக நிறைவேற்றப்படாமலே இருந்தன.

பிரித்தானியர் தமது இயந்திரசாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பெருந்தொகையான பண்டங்களை விற்பனை செய்யும் சந்தையாகவும் இலங்கையைப் பழக்கி வைத்தார்கள்.

வெள்ளைக்காரர் தமக்கு வேண்டிய தேயிலை, இறப்பர், தெங்குப்பொருட்கள் என்பனவற்றை இயன்ற மட்டும் பெறுவதற்காக ஏனைய விவசாயத் துறைகளை உண்டாக்காமலும் உதவி செய்யாமலும் காலங் கழித்தார்கள்.

உணவுத் தானியங்களும் ஏனைய பொருட்களும் இந்தியா முதலாய பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அன்றி இந்தியாவிலிருந்து மிகவும் குறைந்த கூலிக்கு வேலை செய்யவல்ல இந்தியத் தொழிலாளரையும் ஆசைவார்த்தை கூறி அழைத்து இறக்குமதி செய்தார்கள்.

அதனால் உள்ளூர் வாசிகள் அத் தொழிலைச் செய்யும் வாய்ப்பும் வசதியும் இல்லாது போயினர். இலங்கையில் விளையும் பொருட்கள் யாவும் பிரித்தானியாவுக்கும் அதன் பேரரசில் உள்ள நாடுகளுக்குமே ஏற்றுமதி செய்யப்பட்டன.

இன்னும் ஒரு காரியத்தை இந்நிலையில் ஆராய்ந்தால் 150 ஆண்டுகளாக இலங்கையைப் பரிபாலித்த பிரித்தானியர் இலங்கையில் கைத்தொழில் வளத்தை என்றாவது எங்காவது எது விதத்திலாவது பெருக்கவும் இல்லை., பெருக்க நினைக்கவும் இல்லை. இது மாற்றாந்தாய் பிள்ளை வளர்த்த மாதிரி எனக் கூறப்படுவது முற்றும் உண்மை என்றே கூறவேண்டும்.

ஆனால் இரண்டாவது யுத்த நெருக்கடியினால் கைத்தொழில் முறைகள் இங்கிலாந்திலே செய்துகொள்வது இயலாதபோதும் ஏற்றுமதி செய்வதற்கு போக்குவரத்து வசதிகள் வாய்ப்பற்ற போதும் இலங்கையில் சில கைத்தொழில் அபிவிருத்திகளைச் செய்யப் பிரித்தானியர் முற்பட்டனர். அப்பொழுது புடைவை, பாதரட்சை முதலியன முதலாளிகளின் முதலீடுகளில் செய்யப்படலாயின. அதனால் செல்வந்தருக்கே வருமானத்தில் பங்கு பிரிக்கப்பட வாய்ப்பும் ஏற்பட்டது. அதே சமயத்தில் ஏழைத் தொழிலாளர் நிலைமை மிகவும் பரிதாபகரமாயிற்று. அவர்கள் சாதாரண வாழ்க்கை வாழவே இயலாதவராயினர்.

ஆகவே பிரித்தானியர் தமது பரிபாலனத்தின் இறுதிக்காலத்தில் செய்யமுற்பட்ட தொழிலபிவிருத்தி ஒரு முக பலனையே அளித்தது. பணக்காரரை மேலும் பணக்காரராக்கியதோடு ஏழைகளை மேலும் ஏழைகளாக்கியது என்று தான் கூறவேண்டும். வாழ்க்கை தரம் உயர உயர ஏழைகள் நிலைமை மேலும் பரிதாபகரமாயிற்று.

இரண்டாவது மகாயுத்தத்தின் போது இலங்கையில் நடைபெற்ற பொருளாதார மாற்றம் அல்லது முன்னேற்றம் இலங்கையின் அரசியல் நிலைமையில் ஒரு மாற்றத்தையே உண்டு பண்ணக் கூடியதாயிற்று. அதனால் வர்க்கத் தொடர்பும் தேசிய விடுதலை இயக்கமும் வளர ஆரம்பித்தன. தொழி லாளர் அதிக ரிப்பும் அவர்கள் தொழிற் சங்கங்கள் மூலம் ஒன்று திரண்டமையும் அரசியல் பலத்தை உருவாக்குவதாயிற்று. அதனால் ஏற்பட்ட பலம் பிரதேச முதலாளித்துவத்தையும், உள்ளூர் நிலக்கிழாரையும், இடை வகுப்பின ரையும் எதிர்க்க ஆயத்தமானது.

இவ்வேளையிலே தான் இலங்கையில் இடதுசாரிகள் இயக்கம் தலைநிமிர்த்தியதோடு முதலாளித்துவத்தை முறியடிப்பதற்குக் கூக்குரல் இடுவதுமாயிற்று. பிரித்தானிய முதலாளிகளின் தோட்டங்கள், வங்கிகள், ஆலைகள் தேசிய மயமாக்கப்படல் வேண்டும்.

இலங்கையில் உள்ள பிரித்தானிய படைகள்யாவும் உடனடியாக வெளியேற்றப்படல் வேணடும். இலங்கையில் உள்ள இராணுவ கடற்படைத் தளங்கள் யாவும் முகாம்களை நீக்கிக் கொள்ளுதல் வேண்டும். அரசியல் அதிகாரம் சாதாரண தொழிலாளிகள் கைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் உலக தொழிற்சங்க சம்மேளனத்தில் அங்கத்துவமும் பெற்று இதற்கு ஆதரவாயிருந்தது.

(தொடரும்)

# தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்பளிப்பு வழங்கினார்



ஏனைய மாவட்டங்களை விட மாறுபட்ட பிரச்சினைகளைக் கொண்டிருக்கும் யாழ். மாவட்டத்தில் வசதி வாய்ப்புக்கள் குறைந்த நிலையில் 2007 ஆம் வருட அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்துள்ள யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களின் திறமைகளைக் கண்டு தான் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

2007 ஆம் வருட அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ். மாவட்டப் பாடசா லைகளின் மாணவ மாணவிகளைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக நேற்று முன்தினம் மாலை அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள், யுத்த சூழ்நிலைக்குள் வாழ்ந்து தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாணவர்கள் தங்களுக்கான எதிர்காலம் அமைதியானதாக உருவாக ஏதுவானவகையில், தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து எமது சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி சரியானதும் நடைமுறை சாத்திய மானதுமான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

2007, அகில இலங்கை தமிழத் தினப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய கரவெட்டி மாணிக்கவாசகர், வேம்படி மகளிர், யாழ். அருணோதயா, இந்துக் கல்லூரி, மகாஜனா. மத்திய கல்லூரி, இந்து மகளிர், ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பாராட்டப்பட்டது டன் அவர்களை ஊக்குவிக்கும் முகமாக அன்பளிப்புக்களும் அமைச்சரால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர்கள்,மாவட்ட மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோா கலந்துகொண்டனர்.மேற்படி மாணவர்கள் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் கலந்துகொள்வதற்காக கொழும்பு சென்றிருந்த சமயம் கொழும்பில் இவர்களுக்கான பல்வேறு வசதிகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


## திணைக்கள அடையாள அட்டை வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

### போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான பிளாஸ்டிக் அடையாள அட்டை வழங்குவதற்கான கூறுவிலைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 19.06.2008 திகதி 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலையுடன் அடையாள அட்டையின் மாதிரியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:- தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர் கேள்விச் சபையால் குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் அடையாள அட்டையை வழங்கி முடித்தல் வேண்டும்.

வைத்தியகலாநிதி.ஏ.ஈ.ஞானசோதி,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C/1198)


# தொடரும் யுத்த சூழ்நிலையால் பிராந்திய சிறுவர்களின் கல்வி பாதிப்பு

## ஐ.நா.சிறுவர் நிதியம் ஆய்வில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாக தொடரும் யுத்த சூழ்நிலைகள் பிராந்திய சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. 5முதல் 14 வயது கட்டாயக் கல்விக்கான வயதெல்லையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. யுத்த சூழ்நிலைகள் அதனால் ஏற்படும் இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை, பாதுகாப்பற்ற நிலைமை, குடும்ப வறுமை மற்றும் கல்வி கற்பதற்கு பொருத்தமற்ற சூழ்நிலை உள்ளிட்ட காரணங்களினால் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

இதுபோன்ற காரணத்தினால் கட்டாயக் கல்விக்கான வயதெல்லையை அடைந்த சிறுவர்கள் முற்றாக பாடசாலை செல்லாத நிலைமை காணப்படுவதுடன் பாடசாலை சிறுவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை கைவிட்டு பாடசாலைகளை விட்டு இடைவிலகும் நிலையும் காணப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் மேற்கொண்ட ஆய்வுகளின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை செல்லும் வயதெல்லையை அடைந்துள்ள 1இலட்சத்து 30 ஆயிரத்து687 சிறுவர்கள் உள்ளபோதிலும் அவர்களில் 1 இலட்சத்து 16, 989 சிறுவர்கள் மாத்திரமே பாடசாலை செல்வதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 13 ஆயிரத்து 698 சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை என மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை மோதல்களுடன் தொடர்புடைய எந்தவொரு தரப்பினரும் நாட்டின் இளைய தலைமுறையினரின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் வகையில் செயற்படக் கூடாதென பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (அ)

# இன்று ஒரு தகவல்

## அறிவா? செல்வமா?

இந்த உலகத்தில் நாம் நல்லபடியாக இருக்க வேண்டுமென்றால் அதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது இரண்டு! ஒன்று செல்வம், இன்னொன்று அறிவு. சரி... "இது இரண்டில் சிறந்தது எது?" என்று ஒரு கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்வது? இதே கேள்வியை ஹஸ்ரத் அலியிடம் கேட்டார்களாம் அவர் ஒரு பெரிய அறிஞர். கேள்வி கேட்டவர்களும் சாதாரண மானவர்கள் அல்லர்... அவர்களும் அறிஞர்கள். ஒரு நாள் ஹஸ்ரத் அலியிடம் பத்து அறிஞர்கள் வந்தார்களாம்.

"ஐயா! நாங்கள் பத்துபேரும் உங்களிடம் ஒரே கேள்வியைத்தான் கேட்க வந்திருக்கின்றோம்! ஆனால் ஒவ்வொருவருக்கும் நீங்கள் தனித்தனியாக பதில் சொல்ல முடியுமா? என்று கேட்டிருக்கிறார்கள்! அதாவது ஒரே கேள்விக்கு பத்து விதமான பதிலை எதிர்பார்க்கிறார்கள்!

"சரி கேளுங்கள்... என்ன கேள்வி?" என்றார் இவர். செல்வம்–அறிவு இது இரண்டிலும் சிறந்தது எது?" என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அலி அவர்கள் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு ஒவ்வொரு விதமான பதிலைச் சொல்லி அனுப்பினார்.

முதலில் ஒருவரைக் கூப்பிட்டார்.

அவரிடம் "அறிவானது தீர்க்கதரிசிகள், ஞானிகள், மகான்கள் இவர்களின் பரம்பரைச் சொத்து. ஆனால் செல்வமோ கொடுங்கோலின் ஆயுதம். அதனால் அறிவுதான் சிறந்தது!" என்றார்.

இரண்டாவது ஆளைக் கூப்பிட்டார். "உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள் தான் அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அறிவு உங்களை எப்பொழுதும் காப்பாற்றும். ஆகவே அறிவுதான் சிறந்தது!" என்றார். மூன்றாவது ஆளைக் கூப்பிட்டார்.

"செல்வனுக்கு எப்பொழுதும் விரோதிகள் அதிகம். ஆனால் அறிஞனுக்கு நண்பர்கள் அதிகம். அதனால் அறிவுதான் சிறந்தது!" என்றார். அடுத்தவரைக் கூப்பிட்டார்.

"செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும்! ஆனால், கல்வியோ அதிகரித்துக் கொண்டே இருக்கும். அதனால் அறிவுதான் சிறந்தது!" என்றார்.

இன்னொருவரைக் கூப்பிட்டார்.

"அறிவுள்ளவன் எப்பொழுதும் அதை அடுத்தவர்களுக்கு வாரி வழங்கிக் கொண்டு இருப்பான். அதனால் அவனிடம் தாராளத்தன்மை இருக்கும். ஆனால் செல்வந்தனிடம் கஞ்சத்தனம்தான் இருக்கும். அதனால் அறிவுதான் சிறந்தது!" என்றார்.

ஆறாவது நபரைக் கூப்பிட்டார்.

"செல்வத்தை கள்வர்கள் திருடிக்கொண்டு போக முடியும் ஆனால் அறிவைக் கவரமுடியாது!" என்றார்.

ஏழாவது நபரைக் கூப்பிட்டார்.

"செல்வம்- கால ஓட்டத்தில் அழிந்துவிடும். ஆனால் அறிவை கால ஓட்டம் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே அறிவுதான் சிறந்தது! என்றார்.

எட்டாவது ஆளைக் கூப்பிட்டார்.

"செல்வத்துக்கு எப்பொழுதும் எல்லை உண்டு. நிறை உண்டு. அளவு உண்டு. கணக்கு உண்டு. ஆனால் அறிவுக்கு அப்படிப்பட்ட எல்லை எதுவும் கிடையாது. அதனால் அறிவுதான் சிறந்தது!" என்றார்.

அடுத்தவரைக் கூப்பிட்டார்.

"செல்வம் உள்ளத்தில் உள்ள ஒளியைப் போக்கிவிடும். இருளை உண்டாக்கும் விரிந்த மனப்பான்மையை குறுகலாக்கிவிடும். ஆனால் அறிவு அப்படியில்லை! இருண்ட உள்ளத்தில் ஒளியைப் பாய்ச்சி அதை விசாலப்படுத்தும்... அதனால் அறிவுதான் சிறந்தது!" என்றார்.

இறுதியாக பத்தாவது நபரைக் கூப்பிட்டார். "செல்வம் மனதில் செருக்கை உண்டாக்கும். ஆணவத்தை ஏற்படுத்தும். அதனால் "நானே கடவுள்" என்று நினைக்கும் அளவுக்கு மனிதனைத் தாழ்த்திவிடும். ஆனால் அறிவு பணிவையும் பண்பாட்டையும் வளர்க்கும். அதனால் அறிவுதான் சிறந்தது!" என்றார்.

இப்படி பத்துப் பேருக்கும் பத்துவிதமாக பதில் சொல்லி செல்வத்தைவிட அறிவுதான் சிறந்தது என்று சுட்டிக்காட்டினார் ஹஸ்ரத் அலி. எனக்கு வேண்டிய ஒருவர் பத்துப் பேர் கேட்ட கேள்விக்கு ஒரே பதிலைச் சொல்லிச் சமாளித்து விட்டார். அவர்கள் கேட்டகேள்வி என்ன தெரியுமா?

"என்னிடம் வாங்கிய கடனை எப்பொழுது திருப்பிக் கொடுக்கப் போகிறாய்?", என்பது தான் அந்தக் கேள்வி. "இந்த மாதம் 26ஆம் திகதி தந்துவிடுகிறேன்" என்ற பதிலைச் சொல்லி எல்லோரையும் அனுப்பிவிட்டார். எல் லோரும் போனபின், இவரைத்தனியாகக் கூப்பிட்டு "அது என்ன சார் கணக்கு 26ஆம் திகதி அன்று என்ன அதிசயம் நடக்க இருக்கிறது?" என்று கேட்டேன். "அதிசயம் அன்றல்ல அதற்கு முதல் நாள்தான் சார்" என்றார் அவர்.

"விபரமாகச் சொல்லுங்கள்!" என்றேன். "வேறு ஒன்றுமில்லை... 26ஆம் திகதி தானே எல்லோரையும் வரச்சொன்னேன். அதற்கு முதல் நாளே நான் தலை மறைவாகப் போகிறேன்!" என்றார் ரொம்ப பெருமையாக!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உல்லாசப் பயணத்துறையினருக்கு ஐரோப்பிய வங்கிமூலம் நிதியுதவி

## உல்லாசப் பயணத்துறை அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சிறிய மற்றும் நடுத்தர உல்லாசப் பயணத்துறையினருக்கு மீளவும் தமது தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும்பொருட்டு நிதி மற்றும் ஊக்குவிப்பு உதவிகளை வழங்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் உதவியுடன் டீ.எப்.சீ.சி. மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றினூடாக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாக உல்லாசப் பயணத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த இரு வருடங்களாக உல்லாசப்பயணத்துறை அபிவிருத்தி வரியினைச் செலுத்திய நிறுவனங்கள் இந்த உதவியைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கலாம் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த இலகு கடனானது மிகக் குறைந்த வட்டியைக் கொண்டிருப்பதுடன் ஆகக் கூடுதலாக 20 மில்லியன் ரூபாய்கள் வழங்கப்படும் என உல்லாசப்பயணத்துறை அமைச்சின் செயலாளர் ஜோர்ஜ் மைக்கல் தெரிவித்துள்ளார். இதேவேளை இலங்கையின் உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள இந்திய–இலங்கை கிரிக்கெற் சுற்றுப்போட்டியைக் காண சுமார் 5,ஆயிரம் இந்தியர்கள் இலங்கைக்கு வருவார்கள் என தாம் எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்ட உல்லாசப் பயணத்துறை இயக்குநர்களில் ஒருவரான சந்திரா விக்கிரமசிங்க இதற்கு மேலதிகமாக கதிர்காம யாத்திரைக்காகவும் இந்தியர்கள் அதிகம் வருவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையின் உல்லாசப் பயணத்துறையின் தூதுவர்களான அர்ஜின ரணதுங்க, அரவிந்த டி சில்வா ஆகியோரைக் கொண்டு இலங்கையின் உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ஓ)

# காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் முதலிட எமக்கும் சந்தர்ப்பம் வழங்கவும்

## ஹொல்சிம் லங்கா கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் காங்கேசன்துறை சீமெந்து ஆலையைப் புனரமைத்தோ அல்லது வேறு ஒரு புதிய ஆலையை நிர்மாணித்தோ தாம் சீமெந்து உற்பத்தியை மேற்கொள்ள விரும்புவதாக ஹொல்சிம் லங்கா தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை சீமெந்து ஆலையை விற்பதற்கான தேவை அரசாங்கத்துக்கு இல்லை யானால் அதில் தமக்கும் இணைந்த வர்த்தக முயற்சியாக முதலிட சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என ஹொல்சிம் லங்காவின் தலைவர் மணிலால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பிர்லா நிறுவனம் காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் முதலிடுவதற்கான ஆரம்பக் கட்ட முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ள நிலையில், அரசாங்கம் சகல தரப்பினருக்கும் அங்கு முதலீடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என வும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இவ்வருட முற்பகுதியில் நிர்மாணத்துறை அமைச்சுடன் கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து காங் கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை யின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்வுள்ளதாக பிர்லா குழுமம் அறிவித்திருந்த நிலையிலேயே ஹொல்சிம் லங்கா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

தற்போது நிலவும் சீமெந்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குதல் ஆகிய இரு முக்கிய நோக்கங்களின் அடிப்படையிலேயே காங்கேசன்துறை தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கவுள்ளதாக் நிர்மாண மற்றும் பொறியியல் சேவைத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இராசிபலன்

12.06.2008

(வைகாசி 30. வியாழக்கிழமை)

நவமி பிற்பகல் 01.59 மணிவரை

அத்தம் பின்னிரவு 04.41 மணிவரை

இராகுகாலம் 01.22-02.52 மணிவரை

சுபநேரம்-07.22-08.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், உடல்நலம். |
| இடபம் | தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, சொத்துப்பிணக்கு. |
| மிதுனம் | ரோகநிலை, சுபசெலவு, கல்வியில் ஆர்வம், நல்ல முயற்சி. |
| கடகம் | அன்னியர் சந்திப்பு, சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | மனோசங்கடம், அதிகசெலவு, வேலைச்சுமை, ரோகநிலை. |
| கன்னி | ஜனவசியம், நல்ல முயற்சி, போசனசுகம், பெரியோர் உதவி. |
| துலாம் | மனச்சோர்வு, காரிய அலைச்சல், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| விருச்சிகம் | தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| தனுசு | உற்சாகம், சுபநிகழ்வு, மேன்மையடைதல், நண்பர்கள் உதவி. |
| மகரம் | அச்சமான நிலை, பிரயாணம். தொழில் நன்மை, புதிய திட்டமிடல். |
| கும்பம் | நிலைமாற்றம், வீண்பகை, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம். |
| மீனம் | நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, பொருள் சேர்க்கை. |

வளவன்

# புலி ஆதரவு அமைப்புகளை கட்டுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் இயங்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் புலிகளுக்கு விதிக்கப் பட்டுள்ள தடை யுத்தரவு மேலும் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலை வர் ஜோசே மெனுவல் குறிப்பிட்டுள்ளதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் நேர்மையானதும் நல்லெண்ணத்துடனும் முன் வைக்கப்பட்டவை என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசாங்கம் இதனை பிழையாக விளங்கிக் கொள்ளக்கூடாது எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான புதிய தலைவர் ரவினாத ஆரியசிங்கவுடனான சந்திப்பின் போதே ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பாதுகாப்பு பிரிவுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக இலங்கைப் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார். (அ)



நல்லூர் திருநெறிய தமிழிசை வெளியீட்டு கழகத்தினால் வெளியிடப் பெற்ற திருமுறைத் தேனமுது ஒலித்தட்டுகளில் பாடியுள்ள தேவார இசைமணி கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தனுடன் பக்க வாத்தியம் வாசித்த அகில இந்திய வானொலி கலைஞர்கள் டி.எச்.வசந்தா (வயலின்), ஶ்ரீ.சிவகுமார் (வீணை), எஸ். ரெங்கராஜன் (மிருந்தங்கம்), எச்.பரமசிவம் (கஞ் சிரா), ஆர். எஸ். தீதையாளு (முகர்சிங்) ஆகியோரும் தி.சுந்தரராஜன், கு.பாலஷண் முகன் ஆகியோர் ஒலிப்பதிவு நிறைவு செய்த பின் திருச்சி ஜே.பி.ஒலிப்பதிவு கலையகத்தில் எடுக்கப்பட்ட படம்.

# மாணவர்களைப் பழிவாங்கும் அரசாங்கத்தின் நடவடிக்கை

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்காது பாடசாலைகளை இரண்டு நாள் மூடிய அரசாங்கத்தின் செயற்பாட்டை கடுமையாக கண்டித்துள்ள ஜே.வி.பி இத்தகைய நடவடிக்கை ஆசிரியர்களை அச்சுறுத்துவதற்காக மாணவர்களை பழிவாங்கும் செயலாகும் என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் அரசியல் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமது சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரி ஆசிரியர் சங்கங்கள் முன்னெடுத்த நியாயமான தொழிற்சங்கப் போராட்டத்துக்கு மத்தியில் அரசாங்கம் நாடு முழுவதிலும் இரண்டுநாள் பாடசாலைகளை மூடியுள்ளது.

பிரச்சினைகளை தீர்ப்பதை கைவிட்டு பாடசாலை மாணவர்களின் கற்றல் உரிமையை அரசாங்கம் பறித்துள்ளது.

இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட அதிபர் ஆசிரிய சேவையிலுள்ளோருக்கு பல வருட காலங்களாக சம்பள முரண்பாடு பிரச்சினை இருந்து வருவதென்பது இரகசியமல்ல. தற்போதைய வாழ்க்கை செலவுக்கு மத்தியில் அவர்களுக்கு கிடைக்கும் சம்பளம் போதுமானதல்ல.

இலங்கை சமூகத்தின் மத்தியில் கௌரவமான தொழிலாக கருதப்படும் ஆசிரியர்களையும் தொழிற்சங்கப்போராட்டத்தையும் நடத்தும் நிலைக்கு அரசாங்கம் தள்ளிவிட்டுள்ளது.

பிரச்சினைகளை தீர்க்காது தொழிற் சங்கப்போராட்டங்கள் முடியும் வரை பாடசாலைகளை மூடும் கொள்கையை அரசாங்கம் முன்னெடுக்கும் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

ஆசிரியர்களை அச்சுறுத்துவதற்காக பாடசாலைகளை மூடி மாணவர்களை பழிவாங்கியுள்ளதோடு கற்றல் உரிமைகளையும் பறித்துள்ளது.

இதன் மூலம் அரசாங்கத்தின் வங்குரோத்துநிலை வெளிப்பட்டுள்ளது. (ச-5)

## தூய அந்தோனியார் வருடாந்தத் திருவிழா

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேசத்திலுள்ள தூய அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 4ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளை காலை திருநாள் திருப்பலி திருச் சொரூப பவனி, சொரூப ஆசீர் ஆகியவற்றுடன் நிறைவு பெறுகிறது.

இம்முறை எளிமையான முறையில் திருவிழா கொண்டாடப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ச-72)

## ஈ.பி.டி.பி உறுப்பினர் உயிரிழப்பு

மன்னார் பஸார் வீதியில் கடந்த மாதம் 21ஆம் திகதி இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் இராசையா மோகன் (வயது 43) என்பவர் உயிரிழந்துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் அஞ்சலிக்காக அன்னாரது சடலம் வைக்கப்பட்டுள்ளது. (எ-5)

# நேர்முகப் பரீட்சை பெறுபேறு கிடைத்ததும் அதிபர் சேவையில் உள்ளோருக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

சகல மாகாணங்களிலிருந்தும் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றதும் இலங்கை அதிபர் சேவையிலுள்ளோருக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று கல்வி அமைச்சின் ஊடகச் செயலாளர் ஜயவீர தெல்பா கொட தெரிவித்தார்.

பதில் அதிபர்களாக கடமைபுரிவோர் மேற்கொள்ளவுள்ள சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிட்டதாவது,

இலங்கை அதிபர் சேவையிலுள்ளவர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் பொருட்டு நடத்தப்பட்ட பரீட்சை முடிபுகள் வெளிவருவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அதிபர் சேவையிலுள்ளவர்களுக்கான பதவியுயர்வு வழங்குவதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பதவியுயர்வுக்கான எழுத்துப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்துள்ள போதிலும் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகள் மேல்மாகாணத்தை தவிர ஏனைய மாகாணங்களில் இருந்து இது வரை கிடைக்கப்பெறவில்லை.

அதிபர் சேவையில் 8ஆயிரம் வெற்றிடங்கள் நிலவுகிறது. இதில் 3 ஆயிரம் பேர் பதில் அதிபர்களாக கடமை புரிகின்றனர்.

இருப்பினும் பதவியுயர்வுக்காக நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில் சித்தியடையாது இருப்பினும் மிக நீண்டகாலமாக பதில் அதிபர்களாக கடமை புரிந்து வருபவர்களுக்கு பதவியுயர்வு வழங்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிபர் சேவையிலுள்ளவர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் அனுமதியினை பொதுச் சேவை ஆணைக்குழுவே வழங்கவேண்டும்.

இதன் பிரகாரம் மாகாணங்களில் இருந்து நேர்முகப் பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றதும் அவை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றின் புள்ளிகளின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டு பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் பதவியுயர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

பதவியுயர்வு வழங்கும் விடயத்தில் எவ்வித பாரபட்சமும் இடம்பெறக் கூடாதென அதிகாரிகளை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பணித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முதல் பதவியுயர்வு வழங்கப்படாத பட்சத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக பதில் அதிபர்களாக கடமை புரிவோர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

## பற்றறிகள் மீட்பு

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் தனிப்பட்ட ஒருவரது பெயருக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான பற்றறிகள் மற்றும் வானொலிப் பெட்டிகளை வடக்கிற்கு எடுத்துச் செல்ல முற்பட்டபோது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாரினால் குறித்த வர்த்தக நிறுவனம் சுற்றிவளைக்கப்பட்டபோது இந்தப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# வில்லா 'ஹட்ரிக்' கோல் ரஷ்யாவை வீழ்த்தியது ஸ்பெயின்



(இன்ஸ்பிரக்)

யூரோ கோப்பை கால்பந்தாட்டத் தொடரின் லீக் போட்டியில் டேவிற் வில்லா ஹட்ரிக் கோல் அடிக்க ஸ்பெயின் அணி ரஷ்யாவை 4:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஐரோப்பிய அணிகள் மோதும் யூரோ கோப்பைக்கான கால்பந்தாட்டத் தொடர் சுவிஸ்சர்லாந்து, ஆஸ்திரியாவில் நடக்கிறது.

நேற்று முன்தினம் ஆஸ்திரியாவிலுள்ள இன்ஸ்பிரக்கில் நடந்த டி பிரிவு லீக் போட்டியில் ஸ்பெயின், ரஷ்ய அணிகள் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி முதல் நிமிடத்தில் இருந்து ஸ்பெயின் அணியின் தாக்குதல் ஆரம்பமானது.

இருபதாவது நிமிடத்தில் பெர்னாண்டோ டோரஸ் கொடுத்த அருமையான பாசைப் பெற்ற டேவிற் வில்லா அப்படியே கோல் அடிக்க ஸ்பெயின் ரசிகர்கள் உற்சாகமாகினர்.

இதற்கு பதிலடி கொடுக்க ரஷ்ய வீரர்கள் மேற்கொண்ட முயற்சிக்கு பலன்கிடைக்கவில்லை.

இவர்கள் வசம் பெரும்பாலான நேரம் பந்து இருந்தபோதும் சரியான பினிஷிங் இல்லாமையினால் வாய்ப்புக்களை வீணாக்கினர்.

பின்னர் 44-வது நிமிடத்தில் ஆன்டிரஸ் இனியஸ்டா துடிப்பாக பந்தை பாஸ் செய்ய அதை அழகாக பிடித்த டேவிட் வில்லா இன்னொரு கோல் அடித்தார்.

முதல் பாதி முடிவில் ஸ்பெயின் 2:0 என்ற கோல் கணக்கில் அசைக்க முடியாத முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் டேவிற் வில்லாவின் ஆதிக்கம் தொடர்ந்தது. களத்தில் பம்பரமாக சுழன்றாடிய இவர் 75-வது நிமிடத்தில் ஒருகோல் அடித்தார்.

இதன்மூலம் தொடர்ந்து மூன்று கோல் அடித்த இவர் இத் தொடரில் ஹட்ரிக் சாதனை படைக்கும் முதல் வீரர் என்ற பெருமை பெற்றார்.

86-வது நிமிடத்தில் ரோமன் பவ்லியுசென்கோ ஒருகோல் அடித்து ரஷ்யாவுக்கு ஆறுதல் அளித்தார்.

ஆட்டம் முடியும் நேரத்தில் செஸ்க் பாப்ரிக்காஸ் ஒருகோல் அடிக்க ஸ்பெயின் அணி 4:1 என்ற கணக்கில் அசத்தல் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக டேவிட் வில்லா தெரிவு செய்யப்பட்டார். (5)

## டென்னிஸ் தரவரிசையில் நம்பர்-1 ஆனார் இவானோவிச்

சர்வதேச பெண்கள் டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை பின்னுக்குத் தள்ளிவிட்டு சேர்பியாவின் அனா இவானோவிச் முதலிடத்தை கைப்பற்றுகிறார். சர்வதேச பெண்கள் தரவரிசைப் பட்டியலில் நீண்டகாலமாக முதலிடத்தை தக்கவைத்திருந்த பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அந்த இடத்திற்கு ரஷ்யாவின் மரியா ஷரபோவா முன்னேறினார்.

இந்நிலையில் தற்போது நடைபெற்று வரும் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டிகளின் 4-வது சுற்றிலேயே சரபோவா தோல்வியுற்றார். இதனால் இவானோவிச்சுக்கு சர்வதேச பெண்கள் டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது. (5)




## நடப்பு சம்பியன் கிரீஸ் தோல்வி

(ஆஸ்திரியா)

யூரோ கோப்பை கால்பந்தாட்டத் தொடர் ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு 12.15 மணிக்கு நடந்த ஆட்டத்தில் டி பிரிவிலுள்ள கிரீஸ் - சுவீடன் அணிகள் மோதின.

இதில் நடப்புச் சம்பியனான கிரீஸ் அதிர்ச்சிகரமாக 0:2 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது.

ஆட்டத்தின் 67-வது நிமிடத்தில் சுவீடன் வீரர் இப்ராகீம் மோவிக் முதல் கோலை அடித்தார்.

சர்வதேசப் போட்டியில் அவர் அடித்த முதல் கோல் இதுவாகும்.

சுவீடன் அணிக்காக 2-வது கோலை அடித்தவர் பீட்டர் ஹேன்சன், பின்கள வீரரான அவர் 72-வது நிமிடத்தில் இந்தக் கோலை அடித்தார்.

இறுதிவரை கிரீஸ் அணியால் ஒரு கோலைக் கூட போடமுடியவில்லை.

ஆட்டம் முழுவதும் சுவீடனில் ஆதிக்கமே இருந்தது. (5)

# ஜனாதிபதியின் குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளியிடும் வரை போராட்டம்

## ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



(கொழும்பு)

மகிந்த குடும்பத்தின் அரசியல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் போராட்டங்கள் தொடரும் என அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் போராடும் அதேநேரம் மக்கள் வாழ்க்கைச் சுமைக்கு எதிராகப் போராடுகின்றனர். பண வீக்கம் 30 வீதமாக உயரக் காரணமான இந்த அரசாங்கம் பொருள்களின் விலைகளையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

தற்போது ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்குச் சுமுகவழியில் தீர்வு காண முடியாது பாடசாலைகளையே இழுத்து மூடியுள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை எதிர்கால சந்ததியின் கல்வி நடவடிக்கைகளை வெகுவாகப் பாதித்துள்ளது.

இந்த அரசாங்கம் நிர்வாகத் திறமையைக் கொண்டிருக்கவில்லை. இதனால் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடுகின்றது. இலங்கைக்கு எரிபொருளை நியாய விலையில் தருவதாக சில நாடுகள் உறுதியளித்திருந்தன.

அவர்களின் இந்த உறுதிமொழிக்கு இன்று என்னவாயிற்று? எனக் கேள்வி எழுப்பினார். புலிகளுடனான போரைக் கடந்த வருடம் முடிபுக்குக் கொண்டு வருவோம் என்று முதலில் கூறினர். பின்னர் இந்த வருட இறுதிக்குள் என்றனர்.

அரசின் இந்த கூளுரைப்பும் இன்று பொய்யாகிவிட்டது. இன்று மாகாண சபைகளைக் கலைத்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி இந்தத் தேர்தலைச் சந்திக்கவும் தயாராகவேயுள்ளது.

மகிந்த குடும்பம் ஆட்சியைத் தக்க வைப்பதற்காக தன்னாலான அனைத்து முயற்சிகளையும் செய்து வருகின்றது. இதற்காகக் கட்சி அரசியல் திட்டங்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளன.

இன்று என்னை நாடாளுமன்றம் செல்ல விடாது தடுப்பதற்காகத் தனது கைக்கூலிகளை அரசாங்கம் பயன்படுத்துகின்றது. அதே நேரம் ஊடகங்களும் அச்சுறுத்தப்படுகின்றன. ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் நடவடிக்கையே இதுவாகும் என்றார். (ச-5)

## கடந்த மாதத்தில் மட்டும் 15 பொதுமக்கள் கடத்தல்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த மாதம் 15 பேர் கடத்தப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் கண்காணிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஆணைக்குழுவின் தலைவரும் மேலக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளதாவது,

இந்தக் கடத்தல்கள் கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலுமே நடைபெற்றுள்ளன. பொலிஸார் மேற்கொள்ளும் நீதிக்குப் புறம்பான கைதுகளால் நகரில் வாழும் தமிழ்மக்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இக் கடத்தல்கள் வெள்ளை வானில் வந்தவர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. கடத்தல்கள் மிகவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நான் அனைத்துலக சமூகத்துடன் தொடர்புகளைக் கொண்டிருந்தேன். அவர்கள் இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர் என்றார். (எ-5)

## தமிழ்நாட்டுத் தமிழர்கள்...

களின் இனப்பிரச்சினைத் தீர்வு போர் வழியில்தான் உள்ளது என்பது அரசின் மாறா நிலைப்பாடு. எனினும் தேவை கருதி குறுகிய காலத்திற்குச் சமாதான வழியைப் பயன்படுத்துவது அரசின் ஒரு தந்திரம்.

சமாதான வழியில் அரசியல் தீர்வு காணும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பது தமிழரின் வரலாறு கூறும் பாடம். ஆனால் போர் மூலம் புலிகளை அழிக்க முடியாது என்பதும் உண்மை. போரில் வெற்றி காண்பது என்பது தமிழ் மக்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அந்த வெற்றிக்காக சேர்ந்துழைப்பது தமிழரின் வரலாற்றுக் கடமையாகவுள்ளது.

புலிகளுக்கு எதிராகவும் - தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகவும் ஒரு மறைமுகப் போரை இந்திய அரசு நடத்தியே வருகின்றது.

தமிழரை இன அழிப்புக்குள்ளாக்கும் அரசுக்கு ஆயுத உதவிகள் புரிந்து தமிழின அழிப்பை ஊக்குவிக்கின்றது.

தமிழ்நாட்டு மீனவர்களைத் தமிழர்கள் என்ற காரணத்துக் காகவே இலங்கைக் கடற்படை தாக்கி வருகின்றது. இதையும் இந்திய அரசு மௌனமாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இந்திய அரசு கடைப்பிடித்து வரும்இந்த தமிழின விரோதப் போக்கைத் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் - மக்களும் புரிந்து கொண்டு - விழிப்படையும் வரை இந்திய அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகள் தொடரவே செய்யும் என்றார். (ச-5)

## இலங்கையைச் சேர்ந்த முருகன் சிலை மீட்பு

இலங்கையின் கதிர்காமம் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு முருகன் சிலையை நீயத் தாங்கள் மீட்டுள்ளதாகத் தமிழகக் காவல்துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் சீனிவாசன் என்ற ஒரு நபரிடமிருந்து இந்தச் சிலை மீட்கப்பட்டதாகத் தமிழகக் காவல்துறையின் சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவின் டி.ஐ.ஜி.ஆறுமுகம் தெரிவித்தார்.

இச் சிலை ஐம்பொன்னாலானது என்றும் 300 ஆண்டுகள் பழமையானது என்றும் அங்கீகரிக்கப்பட்ட தொல்லியல்துறை நிபுணர்கள் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிலையைப் பரிசோதித்துப் பார்த்த தொல்லியல்துறை வல்லுநர்கள் அதன் தோற்றம் மற்றும் வடிமைப்பு போன்ற பல அம்சங்களை வைத்து அது இலங்கையைச் சேர்ந்தது என உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட இச் சிலை தற்போது திருச்சி திருவானைக்காவல் ஆலயத்தில் உள்ள சிலைகள் பராமரிக்கும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-5)

## ரணில்...

நடத்தவில்லை. இந்த நாட்டின் மக்களின் சுதந்திரத்தையும் நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாக்கவுமே போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் இலங்கையில் தோல்வியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவில் பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரின் இக் கூற்றை அரசாங்கம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. நான் அமைச்சர் என்ற வகையில் அல்ல; இந்த நாட்டின் ஒரு பிரஜை என்ற வகையில் அவரின் முன்யோசனையற்ற இக் கருத்தை ஆட்சேபிக்கின்றேன் என இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## சர்வகட்சிக்...

தொடர்பில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக ஜாதிக ஹெலஉறுமய மற்றும் ஐக்கிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் சர்வகட்சிப் பேரவையிலிருந்து விலகிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கிழக்கு...

இங்கு பேசிய ஆளுநர், அதிகாரிகள் மட்டத்திலான நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகள் இனி மேற்கொள்ளவுள்ளதால் இந்த மாகாண மக்கள் மேலும் பயனடைய முடியுமென தான் நம்புவதாகக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ரவூவ் ஹக்கீம், கிழக்கு மாகாண சபை சட்ட ரீதியாக இயங்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாததால் இந்த சபை அதிகாரபூர்வமற்றதாகத் தோன்றுவதாக ஒழுங்குப் பிரச்சினையினை சபையில் எழுப்பினார்.

எனினும் பின்னர் இடம்பெற்ற சபைத் தலைவர்கள் கூட்டத்தில் இதற்கான சுமுக இணக்கப்பாடு காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இங்கு கொள்கை விளக்கவுரையை ஆற்றிய முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்,

கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த சகல மக்களையும் மீளக்குடியேற்ற சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்தார். (ச-5)

## விசேட அடையாள அட்டைகள்..

இன்னும் ஒரு சில தினங்களில் வழங்கப்படும்.

விசேட அடையாள அட்டைகள் அரச அலுவலர்கள், மாணவர்கள், விவசாயிகள், வியாபாரிகள் என வகைப்படுத்தப்பட்டு வழங்கப்படும்.

இவ் அடையாள அட்டைகளை வைத்திருப்போர் வெளிமாவட்டப் பிரயாணத்துக்காக பாதுகாப்பு அனுமதி பெறத் தேவையில்லை என அவர் கூறினார்.

பல்வேறு நிறுவனங்களின் அன்பளிப்புக்கள் மூலம் குடாநாட்டு மக்களின் தேவைகள் பல நிறைவேற்றப்படுகின்றன. மக்கள் வங்கியின் நிதியுதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டன.

உளவளத் துணை நிறுவனத்தின் உதவியுடன் மணற்காட்டுப் பிரதேச மக்களுக்கு ஒவ்வொரு கிழமையும் மருந்துப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

21 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 40 கணனிகள் சில பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன. ஏசியா பவுண்டேசன் நிறுவனம் வழங்கிய ஆயிரம் புத்தகங்களில் யாழ்.பொது நூலகத்துக்கு 100 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை எதிர்வரும் மாதங்களில் யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றில் கல்வி சார் கண்காட்சி ஒன்றை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் யாழ்.இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மாணவர்கள் தங்களின் எதிர்காலக் கல்வியைத் திட்டமிடுவதற்கு வழிகாட்டும் நோக்கமாகவே இக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் இக் கண்காட்சியில் விற்பனை நிலையங்களும் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மீனவர்கள் தொழில் செய்வதற்கான சூழ்நிலை காணப்படாததால் அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இரவில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக இராணுவத்தினருக்கு அறிவிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட பிரதேச பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாகத் தகவல் வழங்குமாறும் யாழ்.இராணுவத் தளபதி கேட்டுக் கொண்டார். (அ)

## தமிழ்ப்...

நாக்கு வெட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்கள் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் இருவரின் நிலை கவலைக்கிடம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பதற்ற நிலை தோன்றியுள்ளது. இந்தத் தோட்டத்தில் தமிழர்கள் குறைந்தளவிலேயே வாழ்வதால் அவர்கள் மத்தியில் பாரிய அச்சம் ஏற்பட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார். (ச-5)

## இலங்கை...

பட்டிருக்கும் 10 அமைச்சுப் பொறுப்புக்களில் 4 புதிதாக உருவாக்கப்பட்டிருப்பதாக ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். இளைஞர் விவகார அமைச்சினூடாகத் திட்டங்களை முன்னெடுத்துத் தமிழ்நாட்டைப் போன்று மாகாண சபையைப் பலப்படுத்துவதற்கு முதலமைச்சருடன் இணைந்து செயற்பட நான் திட்டமிட்டுள்ளேன் என்றார் ஹிஸ்புல்லா.

ஹிஸ்புல்லாவும் கிழக்கு மாகாண அமைச்சர் பிள்ளையானும் இணைந்து 15 மணித்தியாலங்கள் செலவு செய்து கிழக்கு மாகாணம் தொடர்பான அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்திருப்பதாக முஸ்லிம் தலைவர்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது அமர்வு நேற்று நடைபெற்றது. மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ரவூவ் ஹக்கீம் உட்பட எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மொஹறான் விஜய விக்கிரம முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (ச-5)

## எருக்கலம்பிட்டி கடற்படைத் தளம் மீது...

மன்னார்த் தீவில் எருக்கலம்பிட்டியில் அமைந்துள்ள கடற்படை நிலையின் மீது புதன்கிழமை அதிகாலை படகுகளில் வந்த விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டு, தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் இழப்புக்களுடன் பின்வாங்கச் செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படை அறிவித்துள்ளது.

இதன்போது ஏற்பட்ட மோதல்களில் 5 விடுதலைப்புலிகளும் 3 கடற்படையினரும் கொல்லப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

சில கடற்படையினர் காயமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள கடற்படை, இந்த மோதலில் விடுதலைப்புலிகளின் தலைவர் சிறிமாறன் என்பவரும் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

தாக்குதலின் பின்னர் விடத்தல்தீவுப் பகுதியை நோக்கித் தப்பியோடிய விடுதலைப்புலிகளின் படகுகள் மீது விமானப் படையினரின் எம்.ஐ.-24 ரகத் தாக்குதல் ஹெலிகொப்டர்கள் அதிகாலை தாக்குதல் நடத்தியதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை எருக்கலம்பிட்டி கடற்படை முகாம் மீது தமது கொமாண்டோ அணிகள் நேற்று அதிகாலை 2 மணியளவில் தாக்குதல் நடத்தி அந்த முகாமை அழித்துள்ளதாக விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

இதன்போது 10ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன் தங்கள் தரப்பில் 4 கொமாண்டோக்கள் பலியாகியிருப்பதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இத் தாக்குதலையடுத்து எருக்கலம்பிட்டி மக்கள் மத்தியில் பெரும்பதற்றம் ஏற்பட்டதாக கிராமவாசிகள் தெரிவித்தனர். கடற்படை முகாம் தாக்கப்பட்டதையடுத்து மன்னார் பள்ளிமுனை முதல் தலைமன்னார் வரையிலான கடற்பரப்பில் மீனவர்கள் நேற்று மீன்பிடிக்கச் செல்வதற்குக் கடற்படையினரால் அனுமதிக்கப்படவில்லை என மன்னார் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை நேர மோதல்களையடுத்து மன்னார் நகரப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்தும் எறிகணைகள் ஏவப்பட்டதாகவும் இதனால் மன்னார் நகரப் பகுதி குண்டுச் சத்தங்களினால் அதிர்ந்ததாகவும் நகரவாசிகள் தெரிவித்தனர்.

எனினும் காலை முதல் நகரில் வழமை நிலை நிலவியதாக அவர்கள் கூறினர். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.